விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 30 வெள்ளிக்கிழமை (14.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 026

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இந்திய ஒத்துழைப்புக்கு வரவேற்பு

# தீர்வை நாங்களே முன் வைப்போம்!

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

**தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகளின் போது இந்தியாவின் ஒத்துழைப்பு வரவேற்கப்படும். ஆனால் இலங்கை தனக்கு அமைவான தீர்வுத் திட்டத்தையே முன்வைக்கும். இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நன் மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு எவரும் முயற்சி செய்யக்கூடாது. சர்வதேச ரீதியில் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவது ஆகாது.

அரசாங்கத்தை எவரும் விமர்சிக்க முடியும். ஆனால் எங்கள் நாட்டை விமர்சிக்கக் கூடாது.

இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்ப (15ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் சுட்டுக் கொலை விளக்கம் கேட்கிறது இந்தியா

(சென்னை)

இந்திய மீனவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை உயர்ஸ்தானிகரிடம் இந்திய அரசாங்கம் விளக்கம் கோரியுள்ளது.

நடுக்கடலில் இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசமிடம் இந்த சம்பவம் குறித்து விளக்கமளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் (16ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தில் 4 இடங்கள் இராணுவத்திடம்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இதுவரை கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த நான்கு இடங்கள் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவெல தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, மண்டைதீவு, காரைநகர் ஆகியனவே இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. இதேவேளை தரைவழிப் (16ஆம் பக்கம் பார்க்க)

## அடாத மழை; விடாத அனர்த்தம் 98 வருடங்களின் பின் பிரளயம்

(கொழும்பு)

மழை வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24ஆக உயர்வடைந்துள்ளது. நாட்டின் பல பாகங்களிலும் பெய்து வரும் கடும் மழையினால் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. வெள்ளத்தினால் வடமத்திய மற்றும் கிழக்கு மாகாண மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் காரணமாக 2இலட்சத்து 87ஆயிரத்து 871குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக 36பேர் காயமடைந்துள்ளனர். மழை வெள்ளம் காரணமாக 2ஆயிரத்து 680 வீடுகள் முற்று முழுதாக அழிவடைந்துள்ளதாகவும் 15ஆயிரத்து 274வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெள் (15ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகளுக்கு அரசு அழைப்பு

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நிவாரண நடவ (16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

வலம்புரியின் வர்ணக் கலண்டர்

## வெள்ளைக்கொடி வழக்கு கோத்தபாயவுக்கு அழைப்பு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக்கொடி விவகார வழக்கில் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை எதிர்வரும் 25ஆம் திகதி நீதிமன்றில் சமுகம் அளித்து சாட்சியம் அளிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதம் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது சர்வதேச அனுசரணையுடன் வெள்ளைக்கொடியுடன் சரணடையவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களை சுட்டுக்கொல்லுமாறு கோத்தபாய ராஜபக்ஷ கட்டளை இட்டிருந்ததாக ஜனாதிபதித் தேர்தலின்போது முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா (16ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் சடலம் அடையாளம் காணப்பட்டது

(உரும்பிராய்)

உரும்பிராய் யோகபுரம் பகுதியில் கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த பத்துத் தினங்களுக்கு முன்னர் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்ட வன்னியிலிருந்து வந்திருந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் அமிர்தராஜா என்பவரின் சடலமே இது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த (16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாணவர்கள் நூறுபேருக்கு மடிக்கணனி- ஜனாதிபதி வழங்குவார்

### பதிவுகளை இன்று மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

2010ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் சிறப்புச் சித்தியடைந்த 100 மாணவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மடிக் கணனிகளை (லப்டொப்) வழங்கி வைக்கின்றார்.

இவ்வாறு மடிக் கணனிகளைப் பெற தகுதிபெற்ற மாணவர்களை தமது வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக இன்று பதிவுசெய்யுமாறு வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2010ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் சிறப்புச் (16ஆம் பக்கம் பார்க்க)

NIBM BUILDING COMPETENCIES

HOTLINES

021 222 0360 , 0361 , 0362

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

Admissions Started......

NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்

# புலிகளின் தாக்குதலில் தப்பியவரே புதிய கடற்படைத் தளபதி

17வது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள ரியர் அட்மிரல் எஸ்.திஸாநாயக்க தமிழீழ விடுதலைப் புலிகள் 1995ஆம் ஆண்டு மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் உயிர் தப்பியவர் எனத் தெரிய வருகிறது.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த "ரணசுறு" என்ற சீனத் தயாரிப்பு பீரங்கிப் படகின் மீது கடற்கரும்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போதே இவர் உயிர் தப்பியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது இவர் அப் பீரங்கிப் படகில் இருந்தார். இவருடன் இருந்த பல கடற்படை அதிகாரிகளும் மற்றும் கடற்படையினரும் இத் தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்டிருந்தனர்.


விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் "ரணசுறு" மற்றும் "சூரய" ஆகிய இரு பீரங்கிப் படகுகள் அழிக்கப்பட்டன.

33ஆண்டுகளாக கடற்படையில் பணியாற்றும் இவர் நான்காவது கட்ட ஈழப்போரின் போது வடபகுதிக் கடற்படைத் தளபதியாக இருந்ததுடன் கடற்படையில் முக்கிய பதவிகளையும் வகித்துள்ளார்.

1984ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காங்கேசன்துறைக்கு வடக்கே 19பேருடன் சென்ற கடற்புலிகளின் முதலாவது படகை மூழ்கடித்த தாக்குதலில் இவர் பங்கெடுத்துக் கொண்டதாக கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பட்டத்தைப் பெற்ற இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றதுடன் இந்தியா மற்றும் பிரித்தானியாவில் அதிகமான பயிற்சிகளை இவர் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

# தமிழக மீனவர் சுட்டுக்கொலை பிரதமருக்கு கலைஞர் கடிதம்



(சென்னை) தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்லும் இலங்கை கடற்படையினரின் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதி கடிதம் அனுப்பியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர் பாண்டியன் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தால் தமிழக மக்களிடையே கொதிப்பும், ஆவேசமும் கிளம்பியுள்ளதால் இவ்விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு இலங்கை கடற்படையினரின் இச் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழக முதலமைச்சர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை இலங்கை கடற்டையினரால் மீனவர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அ.தி.மு.க நேற்று சட்டசபையில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கடற்படையினரின் இக் கொடூரச் செயலை உடனடியாக தடுத்து நிறுத்த வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட புதுக்கோட்டை மற்றும் நாகை மாவட்ட மீனவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

கடற்படையினரால் தமிழக மீனவர் பாண்டியன் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமானும் கண்டனம் தெரிவித்துள்ளார். (ந-5)

# பொங்கல் கொண்டாட்டத்தைவிட்டு கிழக்கு மாகாண மக்களுக்கு உதவுக!

## மனோ கணேசன் வேண்டுகோள்



(கொழும்பு) பொங்கல் விழாக் கொண்டாட்டங்களை தவிர்த்து கிழக்கு மாகாண மக்களுக்கு உதவிடுவோம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்லி பொங்கல் விழாக்களை கொண்டாட முடியாத சூழல் இன்று ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் வழிக்கு பதிலாக இம்முறை தை வலியுடன் பிறக்கின்றது என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளது.


இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வரலாறு காணாத காலநிலை மாற்றம் காரணமாக கிழக்கு மாகாணம் வெள்ளக் காடாகி விட்டது. சுமார் 10இலட்சம் மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து விட்டனர். இரண்டரை இலட்சம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. இரண்டு இலட்சம் மக்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 18பேர் வரை மரணமடைந்து, 50பேர் வரை காயமடைந்துள்ளனர்.

கணக்கிட முடியாத பரப்பளவு வயற் காணிகள் வெள்ளத்தில் மூழ்க, பெருந் தொகையான கால்நடைகளும் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டுள்ளன. யுத்தத்தினாலும், சுனாமியினாலும் பெருந்துன்பங்களுக்கு முகங்கொடுத்த கிழக்கு மாகாண மக்களை இயற்கை மீண்டும் ஒருமுறை அவலத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

இதன் பின்னடைவுகளிலிருந்து மீண்டும் எழுந்து வருவதற்கு கிழக்கு மாகாண மக்களுக்கு இன்னும் பல்லாண்டுகள் செல்லலாம். இந்த அனர்த்தங்களில் மிக அதிகமாக மட்டக்களப்பு மாவட்டமே பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனச்சாட்சி உள்ள எந்தவொரு தமிழரும் மகிழ்வுடன் பொங்கல் கொண்டாட்டங்களில் ஈடுபட முடியாது.

கொண்டாட்டங்களை தவிர்த்துவிட்டு கிழக்கு மாகாண மக்கள் துன்பங்களிலிருந்து விரைவில் விடுபட வேண்டும் என நாம் பிரார்த்தனைகளில் ஈடுபடவேண்டும். எமது உதவும் கரங்கள் கிழக்கு மாகாண உடன்பிறப்புகளை நோக்கி நீளவேண்டும். இதற்கான பணிகளை ஜனநாயக மக்கள் முன்னணியும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸும் ஏற்கெனவே ஆரம்பித்துள்ளன எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)




# உள்ளூராட்சி சபைத் தேர்தல் யாழ்.மாவட்டத்தில் ஏழு லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்

(யாழ்ப்பாணம்) உள்ளூராட்சித் தேர்தலுக்கு வாக்களிக்க யாழ்.மாவட்டத்தில் 6 லட்சத்து 96 ஆயிரத்து 587 பேர் தகுதி பெற்றுள்ளனர் என யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ,

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை 13 பிரதேச சபைகளுக்கும், 3 நகர சபைகளுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் 201 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மேற்படி தேர்தலில் வல்வெட்டித்துறை நகர சபையில் 9 வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதில் 12 பேர் போட்டியிடமுடியும் எனவும் அதில் 5 இளைஞர்கள் கட்டாயமாக போட்டியிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு பிரதேசசபையிலும், நகர சபையிலும் வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

பருத்தித்துறை, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை ஆகிய நகரசபை மற்றும் காரைநகர், நல்லூர், சாவகச்சேரி, வேலணை, நெடுந்தீவு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தென் மேற்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் கிழக்கு, வடமராட்சி தென் மேற்கு, பருத்தித்துறை ஆகிய பிரதேச சபைகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. (ந-6)

# அராலியில் உழவர் விழா

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் உழவர் விழா நிகழ்வு நாளை தைப் பொங்கல் தினத்தன்று நண்பகல் 12மணியளவில் மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் கே.துஸ்யந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் ,கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் கயிறு இழுத்தல், மாட்டு வண்டிச் சவாரி, சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன. (ந-7)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**கலைப்பீடம்**

**புதிய கல்வியாண்டு 2009/2010க்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்**

கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம் மற்றும் சட்டத்துறை அனைத்து வருட மாணவர்களுக்குமான புதிய கல்வியாண்டு 2009/2010 இற்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 01.02.2011ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றன. மாணவர்கள் அனைவரும் இவ்வறிவித்தலைக் கவனத்திற் கொள்ளவும்.

தற்போதைய இயற்கை அனர்த்தத்தின் காரணமாக முன்னர் அறிவிக்கப்பட்டவாறு 17.01.2011 திகதியன்று விரிவுரைகள் ஆரம்பிக்கப்படமாட்டா. அத்துடன் முதலாம் வருட மாணவர்களுக்கான துணைப்பாட அலகுகளுக்கான பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

பதிவாளர்.
[illegible].01.2011 (சி-2150)



◆ வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்**

**தைப்பூச நாளில் (20-01-2011 வியாழன்) ஆரம்பம்**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- கைவேலை
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (Hair Dressing & Styling)
- பூவேலை
- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- Saree Work

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகளும் நடைபெறும்.

- தையல் அறிவு அற்றவர்களுக்கான 6 மாத தையல் (உடை தயாரித்தல்) பயிற்சிகள்.

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ் சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

# இன்று ஒரு தகவல்

## படிப்பும் புத்தியும்

ஒரு மாணவனைப் பார்த்தேன்.

"என்ன தம்பி, படிப்பெல்லாம் எப்படிப் போகுது?" என்று விசாரித்தேன்.

"நான் நல்லாத்தான் படிக்கிறேன். இருந்தாலும் புத்தியில் சரியாக ஏறுதில்லை" என்றான். சரி, இவனும் நம்ம ரகம் தான் என்று முடிவு பண்ணிக் கொண்டேன்.

புத்திகள் பலவகை. அதைப் பற்றி வாரியார் சுவாமிகள் விளக்கியிருக்கிறார்.

முதலாவது மிருத்து புத்தி. மிருத்து என்றால் மண். மண்சுவரில் ஆணியடிப்பதும் சுலபம். அதைப் பிடுங்கி எடுப்பதும் சுலபம். அது மாதிரி சிலர் குரு சொல்லிக் கொடுப்பதை சுலபமாக கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். சிறிது நேரத்தில் சுலபமாக மறந்தும் விடுவார்கள்.

இரண்டாவது தாரு புத்தி. தரு என்றால் மரம். பச்சை மரத்தில் ஆணியடிப்பது சுலபம். ஆனால் அதை எடுப்பது கஷ்டம். அதேபோல் ஆசிரியரிடம் கேட்டதை கவனமாக மனதில் பதிய வைத்துக் கொண்டு அதை மறக்காமல் இருப்பது தாருபுத்தி.

இதேசமயம் பட்ட மரமாக இருந்தால் அதில் ஆணியடிப்பதும் கஷ்டம். அடிக்கும் ஆணியும் விரைவாக நழுவி விழுந்து விடும். அதேபோல் கேட்கிற விடயம் மனதில் பதிவதும் கஷ்டம். அப்படியே பதிந்தாலும் அது நீடித்திருப்பதும் கஷ்டம்.

சிறிது காலத்தில் மறந்து விடும்.

இன்னொரு வகை புத்தியுண்டு. அதற்குப் பெயர் சிலாபுத்தி.

சிலா என்றால் கல். ஒரு கருங்கல்லில் 4 துளைகளைப் போட்டு ஒரு துளையில் உளியை வைத்து அடித்தால் மற்ற துளை வழியாக பிளந்து கல் இரண்டாகிவிடும். அதேபோல் சந்தியான இடங்களில் குறிப்பான ஒரு பொருளைச் சொன்னால் அதைக் கொண்டு மற்றதையும் தெரிந்து கொள்வது சிலாபுத்தி. வேணுபுத்தி என்றால் என்ன தெரியுமா? வேணு என்றால் மூங்கில். மூங்கில் கணுவில் ஒருபக்கம் உளியை வைத்து அடித்தால் இரண்டு பக்கமும் பிளந்து விடும். அதேபோல் ஒரு செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அதன் முன்–பின் தொடர்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். அது வேணுபுத்தி.

தைல புத்தி என்று ஒன்று உண்டு. தைலம் என்பது எண்ணெய். தண்ணீரில் ஒருதுளி எண்ணெயை விட்டால் அது தண்ணீர் முழுவதும் பரவுவது போல் ஆசிரியர் சுருக்கமாக ஒரு கருத்தைச் சொன்னால் அதை வைத்துக் கொண்டே முழு விடயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். அது தைல புத்தி.

கற்பூர புத்தி என்றால் என்னவென்று தெரியுமா? கற்பூரம் தீப்பட்டவுடன் பற்றிக் கொள்கிறது. ஆசிரியர் சொன்னவுடன் நுண்ணறிவோடு பாடங்களைப் புரிந்து கொள்வது இந்தவகைப் புத்தி.

கதலித் தண்டுப் புத்தியென்று ஒருவகையுண்டு. கதலி என்பது வாழை மரம் – வாழைத்தண்டில் தீவைப்பது எவ்வளவு சிரமமோ அவ்வளவு சிரமத்துடன் கல்வி கற்பது கதலித்தண்டுப் புத்தி. இதைத் தவிர இன்னும் சிலவகையான மாணவர்களை இனம் பிரிப்பதுண்டு. ஆசிரியர் சொன்னதில் நல்லதை மட்டும் எடுத்துக் கொள்பவன் அன்னம். ஆசிரியர் கிடைத்த இடத்தில் பாடத்தைக் கேட்டுவிட்டு பின் தனியாக உட்கார்ந்து சிந்தித்துப் புரிந்து கொள்பவன் பசு.

பசுமாடு அப்படித்தானே. புல்லைக் கண்ட இடத்தில் மேயும். அதன்பின் நிதானமாக அசைபோடும்.

ஆசிரியர் சொன்னதைத் தவிர வேறெதுவும் சொல்ல முடியாதவன் கிளி. பல இடங்களில் பாடங்களைக் கேட்டு கடைசியில் ஒன்றும் புரியாமல் போகிறவன் ஆடு. ஒரு செடியில் வயிறார மேயாது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்று அங்குமிங்கும் அலையும்.

சிலபேருக்கு எருமை என்று பெயர். எருமை குளத்து நீரைக் கலக்கித் தான் குடிக்கும். அதேபோல் ஆசிரியரின் மனத்தை நோகச் செய்து பயில்பவர்கள் இந்த ரகம்.

இவ்வளவு இருந்தும் இந்தக்கால மாணவர்கள் ஒரு தனி ரகம்.

ஒரு ஆசிரியர் வகுப்பில் இலக்கண பாடல் நடத்திக் கொண்டிருந்தார். இறந்த காலம்– நிகழ்காலம் – எதிர்காலம் இதைப் பற்றி பாடம் சொல்லிக் கொடுத்து விட்டு, "இப்ப நான் ஒரு வாக்கியம் சொல்வேன். அது என்ன காலம் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும்" என்றார். சரி யென்றார்கள் மாணவர்கள்.

"நான் நாளைக்கு பாடம் நடத்தப் போகிறேன். இது என்ன காலம்?" என்று கேட்டார் ஆசிரியர். ஒரு பையன் மெதுவாக எழுந்து "இது எங்க போதாத காலம் சேர்" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# காலாவதியான பொருட்களை விற்ற 38 வர்த்தக நிலையங்கள் மீது வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 38 வர்த்தக நிலையங்கள் மீது வழக்குத் தொடரப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை அதிகரித்துள்ளது.

இதற்கமைய அச்சுவேலி, அரியாலை, கொழும்புத்துறை, யாழ். நகர் ஆகிய பகுதிகளில் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டன.

பல வர்த்தக நிலையங்களில் குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப் பட்டிருந்த பால்மா பைக்கற்றுக்கள் சுகாதாரத்திற்கு புறம்பானதாக இருந்துள்ளன. இவற்றில் கிருமிகள் வெளிப்பட்டிருந்தமையையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தல் மற்றும் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமல் விற்பனை செய்தமை, குளிர் பானங்கள் பொறிக்கப் பட்ட விலையிலும் அதிகமான விலையில் விற்றமை தொடர்பாக இவர்கள் மீதுவழக்குத்தொடரப்படவுள்ளதாகஅவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஸ்ரீ–2–6)

# பட்டிப் பொங்கல், கோமாதா உற்சவம்

யாழ் நகர சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் பட்டிப்பொங்கல், கோமாதா உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.நகர சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக ஜனாதிபதி செயலக இந்து சமய விவகார இணைப்பாளர் பிரம்ம ஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள், பாபு சர்மா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும்நிகழ்வில்பட்டிப்பொங்கல், கூட்டுப்பிரார்த்தனை, கோபூசை, கோபவனி, கோதனத் திருமுறை ஓதுதல், ஆசியுரை, பட்டிப்பொங்கல் சிறப்புரை ,விசேட உரை என்பன நடைபெறும். (ஸ்ரீ–9)

# நாடும் நடப்பும்

## தேர்தல் வருகுது

தேர்தல் வருகுது தேர்தல் வருகுது
குஞ்சிரிப் போடு குஞ்சிதம் காட்டி
குட்டிச் சாத்தான் கதை கூறி
முதலைக் கண்ணீர் முக மதில்வழிய
நாக்கடைத்து குடம் பைபோல் கூடு கட்டி
மூச்சடையா தொன்றே நம் முழுவுரிமை யென்று
அற்ற குளத்தாது நீர்பறவையதாய் வாழ
தோள் மாறும் துறவியர் போல்
எம் குடவோலை யொன்றே தம்மை
இடர் தீர்ந்த படர்சோலை யாய்ம்மண்ணுமென
வருகிறார் வருகிறார் வாலாமை தீண்டிய கூடாமை
கவி வடிக்க முடியாத கவிக்குண மாந்தர்.

அறியாதவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 55 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 280 | 200 | 250 | 250 |
| தக்காளி | 60 | 90 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 60 |
| கோவா | 60 | 80 | 100 | 80 |
| கரட் | 70 | 120 | 120 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 35 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 220 | 280 | 280 | 270 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 150 | 150 |
| பாகற்காய் | -- | 180 | 200 | 170 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 100 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 40 | 60 | 50 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 90 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | -- | 150 | -- | -- |
| கறிமிளகாய் | -- | 250 | 250 | 250 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 160 | 130 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | 150 | 80 |
| கீரை – 1 பிடி | 20 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 40 | 60 | 90 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 35-50 | 40 | 50 | 45 |

# இராசி பலன்

14.01.2011
(மார்கழி 30, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
தசமி முழுவதும்
பரணி முன்னிரவு 11.22 மணி வரை
இராகுகாலம் 11.04–12.34 மணிவரை
சுபநேரம் 6.34–8.04 மணி வரை.

**மேடம்** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவுப் பலிதம் உண்டு, நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது குறைந்து போகலாம், மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** எண்ணிய கருமங்கள் உடனுக்குடன் நிறைவேறும், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், உத்தியோக உயர்வுண்டு, உறவினர் கலந்துரையாடலுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வாழ்க் கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**சிங்கம்** தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர், பேச்சில் இனிமை தென்படும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், ஆலய தரிசனம் அமைதியைத் தரும்.

**கன்னி** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டுபிடிக்கலாம், ஆரோக்கியத்தில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்** வழிபாட்டில் ஆனந்தம் காண்பீர்கள், தம்பதியினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக் கும், திட்டமிட்ட பயணங்கள் வெற்றியளிக்கும்.

**விருச்சிகம்** மனக்குழப்பம் அகலும், பயணங்களால் பலன் உண்டு, ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தொழில் விருத்தியுண்டு.

**தனுசு** நெடு நாளைய ஆசையொன்று நனவாகலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கலாம், கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


**மகரம்** மதிப்பும், மரியாதையும் உயரும், வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யப் பாடுபடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வாகன யோகமுண்டு.

**கும்பம்** சுவாரஸ்யமான நாள், நிறுத்தி வைத்த வேலையொன்றை மாலையில் செய்து முடிப்பீர்கள், முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், உறவினர் வழி நன்மையுண்டு.

**மீனம்** எதிர்பாராத தனவரவு வந்து சேரலாம், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், போசன சுகமுண்டு.

வளவன்



யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் "மூளை விழிப்புணர்வுநாள்" பற்றிய கருத்தரங்கு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில், கனடாவின் மக்கில் பல்கலைக்கழகத்தின் மருந்தாக்கவியல்துறை பேராசிரியர் காபர் கேற்றோ, சுவிற்சர்லாந்தின் ஜெனிவா பல்கலைக்கழக மருத்துவபீட நரம்பியல் பேராசிரியர் ஆன் கேற்றோ மற்றும் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை உடற்கூற்றியல் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி ரணில் டி சில்வா ஆகியோர் கருத்துரை வழங்குவதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா

(அல்வாய்)

பருத்தித்துறை தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வித்தியாலய அதிபர் கா.ராமஜயம் தலலமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா. இரகுநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

## குப்பை கொட்டப்படுவதால் சூழல் மாசடைகின்றது

(உடுப்பிட்டி)

வல்வைகடல் நீரேரிக்கு அண்மையாக நகரசபையினரால் சேகரிக்கப்படும் குப்பைகள் இப்பகுதியில் கொண்டு வந்து கொட்டப்படுகின்றது. இதனால் அக்கழிவுப்பொருட்கள் வல்வை கடல் நீருடன் தொடர்புடைய சந்நிதி கோயில் ஆற்றுப்பகுதியில் வந்துசேர்கின்றது.

இதனால் குப்பை கொட்டப்படும் அப்பகுதியும் ஆற்றுநீரும் மாசடைகின்றது. இது போன்றே நிசா புயலின் போது இறந்த நூற்றுக்கணக்கான கால்நடைகள் வல்லையை அண்டியுள்ள கரும்பாளி எனப்படும் இடத்தில் வீசப்பட்டது. அலைநீருடன் அடித்துச் சென்று சந்நிதி கோவில் ஆற்றூடாக கடலுக்கு மிதந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே உரியவர்கள் இதனைக்கவனத்தில்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-52)

## திருட்டு பயனளிக்காத நிலையில் கறவைமாட்டை கொன்ற விசமிகள்

(உடுப்பிட்டி)

அல்வாய் வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றிற்கு திருடுவதற்காக வந்த நபர்கள் அவ்வீட்டில் நின்ற கறவை மாட்டை கத்தியால் குத்திக் கிழித்த சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது, கடந்த 9ஆம் திகதி இரவு இவ் வீட்டிற்குள் புகுந்த விசமிகள் அங்கு திருடுவதற்கு முற்பட்டிருக்கின்றனர். அவர்களின் திருட்டு முயற்சி பயனளிக்காத நிலையில் கன்று ஈன்று கறவை மாடாக அவ்வீட்டில் நின்றிருந்த 35ஆயிரம் ரூபா பெறுமதியான மாட்டை முதுகுப் பகுதியில் கத்தியால் குத்தி வயிற்றுப் பகுதி வரை கிழித்துள்ளனர்.

காலையில் வீட்டுக்காரர் எழும்பிப் பார்த்த போது மாடு இரத்தவெள்ளத்தில் இறந்து கிடப்பதைக் கண்டனர். இச் சம்பவம் தொடர்பாக மாட்டின் உரிமையாளர் அப்பகுதி கிராம சேவையாளருக்கும், பொலிஸாருக்கும் அறிவித்துள்ளார்.

பசுமாட்டை இந்துக்கள் கோமாதா என வழிபடும் இக்காலத்தில் ஒரு பசுமாட்டை கொடூரமாக கொன்றுள்ளமையானது வேதனை தரும் விடயமாகும். (ஸ்ரீ-4-52)

## சாவகச்சேரி பிரதேசசபை செயலர் நியமனம்

(பருத்தித்துறை)

சாவகச்சேரி பிரதேச செயலாளராக செல்வி தர்ஷினி தியாகராசா கடந்த முதலாம் திகதி நியமனம் பெற்றுள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றிய இவர் பதவி உயர்வுடன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இப்பிரதேச சபையில் செயலாளராக இருந்த வே. சிவராஜலிங்கம் ஓய்வுபெற்றமையை அடுத்தே இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஸ்ரீ-3-10)

## பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரிவுகளில் இவ்வாண்டுக்கான பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகளை எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்குமாறு யாழ்.மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இவ்வாண்டுக்கான பிரதேச செயலகங்களுக்கிடையிலான குழு நிலைப் போட்டிகள் மற்றும் தடகளப் போட்டிகளை மிகவிரைவில் நடத்துமாறும் பிரதேச செயலாளர்களுக்கு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

## வடமராட்சியிலிருந்த இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன

(அல்வாய்)

வடமராட்சியில் உள்ள இரண்டு இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

கடந்த 10 வருடங்களாக வடஇந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் மொடேன் தனியார் கல்வி நிலையத்தில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரின் காவலரணும் முகாமும் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

அம்முகாமிலிருந்த இராணுவத்தினர் துன்னாலைப் பகுதியில் அமைந்துள்ள இரா ணுவ முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரியவரு-கிறது.

இராணுவ முகாமின் முன்னால் இருந்த உயரமான காவலரண் கழற்றப்பட்டு அவற்றை எடுத்துச் செல்வதை காணக்கூடியதாக உள்ளது.

மேலும் புலோலி பல்லப்பையில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரும் அண்மையில் அங்கு தங்கியிருந்த தனியார் வீடுகளை வீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் இரண்டு வீடுகளில் இருந்த இராணுவத்தினர் விரைவில் வேறிடத்திற்கு செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

ஓராங்கட்டைச் சந்தியில் இருந்த பரிசோதனை நிலையம் தொடர்ந்து அங்கு செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-19)

## பாண்டியன்தாழ்வு விதானையார் வீதிப்பாலம் புதிதாக அமைப்பு

பாண்டியன்தாழ்வு விதானையார் வீதிப் பாலம் வீதிஅபிவிருத்தி அதிகாரசபையினரால் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள மேற்படி பாலப் பகுதியில் மாற்று வீதியும் அமைக்கப்பட்டுள்ளதுடன் கொழும்புத்துறை வீதியை ஊடறுத்து புதிய பாலம் அமைக்கப்பட்டு வருவதால் மேற்படி வீதியால் பயணிக்கும் கனரக வாகனங்கள் மாற்று வழியைப் பயன்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)

## குழந்தை இயேசுவின் வருடாந்த திருவிழா

(கொழும்புத்துறை)

கோப்பாய் தெற்கு குழந்தை இயேசு தேவாலயத்தின் வருடாந்த திருவிழா நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு மேற்படி ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை குரூஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

தென் கோப்பாய் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் மேற்படி திருவிழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-51)

## வடமராட்சி பாடசாலைகளில் வெளிவாரி மதிப்பீடுகள்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி அலுவலகத்தினால் பாடசாலைகளில் வெளிவாரி மதிப்பீடு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் வெளிவாரி மதிப்பீட்டில் வடமராட்சி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சகல பாடங்களுக்குமான சேவைக்கால ஆலோசகர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்திற்கு செல்லவுள்ளனர்.

மேலும் அன்றைய தினம் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாண வருக்கான கால்கோள்விழா வித்தியாலய அதிபர் அ. சா. அரியகுமார் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

அவருடன் குழு பரிசோதனைக்கு செல்லும் அதிகாரிகளும் கலந்துகொள்வார்கள். (ஸ்ரீ-3-19)


## இரண்டாமாண்டு நினைவலைகள்

### வல்லிபுரம் தங்கமலர் (மலர்)



பிறப்பு 22 06 1951

இறப்பு 04 02 2009

திதி:-14.01.2011

விஞ்ஞான விந்தைகளின் வேகத்தால்
அம்மா என அழைத்தும் அறியாமல்
அவசரமாய் நீங்கள் போனதெங்கே
ஆறடி மண் கூட அதிகம் எனக்கொண்டு
மீளாத்துயில் கொண்டீர்கள்–நாம்
ஆறாத்துயர் கொண்டோம்

குடும்பத்தினர்.

கொடுக்குளாய் வீதி, ஆழியவளை, யாழ்ப்பாணம்.

(3523)

# இ.போ.ச.கிளிநொச்சி சாலையால் சகல இடங்களுக்கும் சீரான போக்குவரத்து சேவை

## சாலை முகாமையாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலையினால் கிளிநொச்சி மாவட்டத்தின் சகல இடங்களிற்கும் சீரான போக்குவரத்து சேவைகள் நடாத்தப்பட்டு வருவதாகவும் யாழ்ப்பாணம்,வவுனியா ,முல்லைத்தீவு , ஒட்டுசுட்டான் போன்ற வெளி மாவட்டங்களுக்குமான பேருந்து சேவைகளும் நடாத்தப்பட்டு வருவதாக இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை முகாமையாளர் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இருபத்தொரு பேருந்துகளே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றில் சில பேருந்துகளைத் தவிர ஏனையவை சேதமடைந்த பழைய பேருந்துகளே சேவையில் ஈடுபட்டுள்ளன.

அத்துடன் தற்போது பெய்து வரும் பருவ மழை காரணமாக வீதிகள் சேதமடைந்து குன்றும் குழியுமாக காணப் படுகின்றன. இதனால் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியாதுள்ளது.

இதே வேளை புதிய பேருந்துகள் எமது சாலைக்கு வழங்கப்படுமிடத்து கண்டி போன்ற இடங்களுக்கான நெடுந்தூர போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம்.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பரந்தனில் இருந்து கிளிநொச்சி வரையும் திருமுறிகண்டியில் இருந்து பரந்தன் வரையும் கண்டாவளையில் இருந்து கிளிநொச்சி வரையும் என பாடசாலை பணிக்கென பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களிற்கு பேருந்து கட்டணத்தின் அரைவாசிக் கட்டணம் அறவிடப்படும் நடைமுறை உள்ள போதிலும் கிளிநொச்சி சாலையின் பேருந்துகளில் மாணவர்கள் இலவசமாகவே பயணித்து வருகின்றனர்.

குறிப்பாக சேவை நோக்கம் கருதி அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிற்காக இயக்கச்சி கோவில் வயல் வரை ஒரு பேருந்துச் சேவை நடாத்தப்பட்டு வருகின்றது. குறைந்த பயணிகள் மட்டுமே இப் பேருந்தில் பயணிக்கின்றனர்.

தனியார் பேருந்துகள் இவ்வழித் தடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட வில்லை. எரிபொருள் செலவைக்கூட ஈடு செய்யாத நிலை இவ்வழித் தடத்தில் காணப்படுகின்ற போதும் அரச ஊழியர்களின் நலன் கருதி இப்பேருந்துச் சேவையை வழங்கி வருகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சியூடாக கிளிநொச்சி சாலையின் பேருந்துகள் முல்லைத்தீவு,விசுவமடு, ஒட்டுசுட்டான் - முத்தையன்கட்டு, ஸ்கந்தபுரம் போன்ற இடங்களிற்கு நான்கு பேருந்துகளும் வவுனியாவிற்கு நான்கு பேருந்துகளும் சேவையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-3-30)

## கமநெகும திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கமநெகும திட்டத்தின் மூலம் கொழும்புத்துறை சுவாமியார் குருத்துவ கல்லூரி உள் வீதிகள் 20 இலட்சம் ரூபா செலவில் கொழும்புத்துறை றொசாறியன் சனசமூக நிலையத்தினரால் புதிதர்க அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதியானது கொங்றீற் வீதியாக புனரமைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)


## பொங்கல் வைபவம்

(கொழும்புத்துறை)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பிரார்த்திக்கும் முகமாக திருமறைக் கலாமன்றத்தில் நாளை சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு பொங்கல் நிகழ்வும் 7 மணிக்கு மன்ற அலுவலகத்தில் பண்பாட்டு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3-51)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)



கிழக்கு மாகாணத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பல விதமான துன்பங்களால் வாடுகின்ற மக்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்கள் சார்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் ஒரு தொகை நிதியினை வழங்கியுள்ளார்.

அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் இயற்கை சீற்றத்தின் காரணமாக பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் சொல்லொணாத்துன்பங்களை சுமந்து கொண்டிருக்கிறார்கள். போக்குவரத்துக்கள் யாவும் வெள்ள அனர்த்தத்தினால் துண்டிக்கப்பட்டு மக்கள் உணவின்றி மரண விளிம்பில் சிக்கித் தவிக்கிறார்கள்.

இந்த நிலையில் அவர்களின் துன்பங்களை போக்குவதற்காக யாழ். பல்கலைக்கழக ஒன்றியத்தினர் யாழ். குடாநாட்டு மக்களிடம் உதவி கோரியிருக்கின்றனர்.

இந் நிலையில் உதவியினை நாம் செய்ய முன்வரவேண்டும் என்றார். அத்துடன் இவ் உதவியை செய்யவிருக்கும் உறவுகள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் தொடர்பு கொண்டு தங்களால் இயன்ற உதவிகளை புரியுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதே நேரம் கிழக்கு மாகாண மக்களுக்கு உதவி செய்வதற்காக யாழ். பல்கலைக்கழக மாண வர்கள் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)



# இலங்கையின் வானிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வானிலையில் பாரிய மற்றம் ஏற்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. லா நினா என்னும் காலநிலை அனர்த்தம் உலகம் முழுவதையும் பாதித்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

கடல் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றம் தரைப்பகுதியை பெரிதும் பாதிக்கும் நிலைமையே லா நினா அனர்த்தம் என அழைக் கப்படுகிறது.

இதனால் இலங்கையின் வானிலையில் பாரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. மழைவீழ்ச்சி 100 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 1912 ஆம் ஆண்டின் பின்னர் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட் டங்களில் கடுமையான மழை பெய்து வருவ தாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த 2 தினங்களில் குறித்த பிரதேசங்களில் 295 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நிலவி வரும் மோசமான கால நிலை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும் என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை இலங்கையின் பல பாகங்க ளிலும் அசாதாரணமான குளிர் காலநிலை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மாலை வேளையில் நுவ ரெலியா பிரதேசத்தில் 8 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவு செய்யப்பட்டுள் ளது. (ஸ்ரீ-2)

## நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான 2 ஆம் வினை திறன்காண் பரீட்சை

வடமாகாணத்தில் கடமைபுரியும் நிகழ்ச் சித்திட்ட உதவியாளர் சேவையைச் சேர்ந்த சகல பதவியினருக்கும் அடுத்த மாதம் இரண்டாவது வினைதிறன்காண் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கு இதுவரை விண்ணப் பித் திருக்காத முதலாவது வினைதிறன்காண் பரீட்சை முடிபுகளை எதிர்பார்திருக்கும் அனைத்து பட்டதாரி உத்தியோகத்தர்களும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என வடமாண அரச சேவை பட்டதாரி அலுவலர் சங்க செயலாளர் கே.எஸ். மயூரன் அறி வித்துள்ளார். (ஸ்ரீ-9)

# இதுவரை 3 இலட்சத்துக்கு மேற்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவப் பொறியியலாளர்களால் மொத்தமாக 3 இலட்சத்து 7 ஆயிரத்து 200 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டும் அழிக்கப் பட்டுமுள்ளன. இன்னமும் 4ஆயிரத்து 872 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு நிலத்தில் கண்ணிவெடி அகற்றப்பட்டு வருவதாகவும் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபயமெதவல தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திரு கோணமலை, மட்டக்களப்பு, பொலன றுவை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களி லேயே இந்தக் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கில் அண்மையில் 4ஆயிரத்து 300 படையினர் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டி ருந்தனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக் கையில் உள்ளூர் அமைப்புக்களுடன் இணைந்து பல சர்வதேச அமைப்புக்கள் ஈடு பட்டிருந்தன. ஒட்டுசுட்டான் மற்றும் நெடுங் கேணி பகுதிகளில் முற்றாக கண்ணிவெடி கள் அகற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் பரந் தனிலிருந்து முகமாலை வரை கொக்கா வில், மன்னார் ஆகிய பகுதிகளில் தற்போது கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிளி நொச்சி, முல்லை தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகியவை உள்ளடங் கலாக வன்னியில் மக்கள் வசிக்கும் பகுதிக ளிலும் வீதிக ளிலும் கண்ணி வெடி அகற்றப் பட்டுள்ளன.



முகமாலை மற்றும் ஆனை யிறவிலி ருந்து பரந்தன் வரை யான ஏ-9 வீதி யில் இராணு வத்தினர் கண்ணிவெடி அகற் றும் நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ள னர்.

அத்துடன் கொக்காவில், துணுக்காய் ஆகிய பகுதிகளிலும் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுவ ரெனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித் தார். (ஸ்ரீ-2)

## தாய்மையின் நித்தியத்துவத்துள் தடம் பதிக்கும் முதலாம் ஆண்டு

| இகம் | | பரம் |
|---|---|---|
| 10 ✦ 01 ✦ 1923 |  | 26 ✦ 12 ✦ 2009 |

**அமரர் பிள்ளையினார் மீனாட்சியம்மா**

திதி:-மார்கழி பூர்வபக்கத் தசமி

14.01.2011

உன் சிரசில் தீமூட்டிய போது
எங்கள் நெஞ்சங்களிலும்
பற்றிக்கொண்ட சோகத்தீ....
இன்றும் கனன்று கொண்டிருப்பதை
நீ அறிவாயா... அம்மா.

"கோவியம்பதி"
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

(சி/2148)

# கனடாவில் தமிழ் இளைஞனுக்கு அகதி அந்தஸ்து நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தமது அரசியல் கருத்து வேறுபாடுகளுக்காக தமிழர்கள் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் விசாரணைக்குள்ளாக் கப்படும் நிலை இல்லை என்று கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் சபை தெரிவித் துள்ள கருத்து கனடா வாழ் மக்கள் பலரின் கண் டனத்துக்கு ஆளாகியுள்ளது.

ஒட்டாவாவின் அரசியல் நெருக்குதுல் கார ணமாகவா இவ்வாறான ஒரு முடிபு அறிவிக்கப்பட்டது. என்றும் கேள்வி எழுப்பப் பட்டுள்ளது.

25 வயதான இலங்கைத் தமிழ் இளை ஞர் ஒருவர் சமர்ப்பித்திருந்த விண்ணப் பத்தை நிராகரித்தே இந்தத் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

இவர் 2009 இல் கனடா வந்தவர் சர்ச் சைக்குரிய எந்தக் கப்பல்கள் மூலமாகவும் வந்தவரல்ல.

இலங்கையின் அரசியல் நிலை, 2009 மே இல் உள் நாட்டு யுத்தம் முடிவடைந்தது முதல் வெகுவாக மாற்றம் கண்டுள்ளது. இந்த மாற்றங்கள் அர்த்த பூர்வமானவை நிலையானவை இளைஞர்கள் விசாரிக்கப் படும் நிலை அங்கு இனிமேலும் காணப்பட வில்லை என்று மேற்படி சபை அறிவித்துள் ளது.

இந்தத் கருத்து பற்றி புலம்பெயர்ந்த தமி ழர்களுக்காக வாதாடி வரும் வான்கூவரைச் சேர்ந்த வழக்கறிஞர் டக்ளஸ் கென் அதி ருப்தி தெரிவித்துள்ளார்.

கனடாவைச் சேர்ந்த இன்னும் பல சட்டத் துறை நிபுணர்களும் இந்த முடிவை ஆட் சேபித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# 2500 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக ஜனாதிபதி வாக்குறுதி அளிக்கவில்லை

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வாக்குறுதி அளிக்கவில்லை என பொது நிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு சம்பள உயர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி எந்த சந்தர்ப்பத்திலும் உறுதி யளிக்கவில்லை என அமைச்சர் சுட்டிக் காட் டியுள்ளார்.

ஒரே தடவையில் இவ்வாண்டில் 2 ஆயி ரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்கு வதாக தாம் எந்த சந்தர்ப்பத்திலும் அறிவிக்க வில்லை என்பதனை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு பணிப்பரை விடுத்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொதுத்துறை ஊழியர்களின் சம்பளத்தை 2 ஆயிரத்து 500 ரூபாவினால் உயர்த்தக் கூடியளவு நிதி இயலுமை அரசாங்கத்திடம் கிடையாது என்றும் பொதுத்துறை ஊழியர் களின் சம்பளம் எதிர்வரும் ஜூலை மாதத்தின் பின்னர் 2 ஆயிரத்து 500 ரூபாவினால் உயர்த்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுவதாகவும் எதிர்வரும் காலங் களில் இந்தத் தொகை மேலும் உயர்த்தப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கள்ளிக்காட்டு இதிகாசம்

18



கவிப்பேரரசு வைரமுத்து

"நாங்களே சேதாரமாகிக் கெடக்கோம். இந்தச் சேதாரம் செய்கூலியெல்லாங் கேக்கப்படாது" - சங்கிலியைத் தொட்டுப் பார்ப்பதற்குள் முதல் நிபந்தனைபோட்டார் பேயத்தேவர். தொட்டுப் பார்த்துத் தடவிப்பார்த்து இழுத்துப் பார்த்து உள்ளங்கையில் போட்டுக் குதிக்கவிட்டுப் பார்த்து ஒரு சங்கிலியைத் தேர்ந்தெடுத்து எடைபோடச் சொல்ல அது ஐந்து பவுனுக்கு ரெண்டு குண்டுமணி 'எச்சா' இருந்தது.

"அஞ்சுக்கு மட்டும் கணக்குப் போடுங்க. அதுலயும் அஞ்சுபத்தக் கொறைங்க- நாயக்கர் அழுத்தி ஆணையிட்டார்.

பவுன் நாப்பத்திஒம்போது ரூபா- அஞ்சு பவுனுக்கு எரநூத்தி நாப்பத்தஞ்சு-செய்கூலி சேதாரம் போட்டா அதுல ஒரு பதினஞ்சு-மொத்தம்-எரநூத்தி அறுவது-ரெண்டு குண்டுமணி தங்கத்துக்கு ஒரு ஏழரை-ஆக மொத்தம் ஏரநூத்தி அறுவத்தி ஏழரை-அய்யா எம்புட்டு கொறைக்கச் சொல்றீக?"- நாடக வசனம் போல் உணர்ச்சியில்லாமல் கணக்குச் சொன்னார் பொன்னாசாரி.

"ஏரநூத்தி நாப்பதே போடுங்க" என்ற நாயக்கர் யாரும் பாராமல் பின்பக்கம் திரும்பி உள்பையில் இருந்த பணமெடுத்து ஒண்ணுக்கு மூனு தடவை எண்ணி- ஒவ்வொரு நோட்டையும் ரெண்டுமுறை பிதுக்கிப் பார்த்து "இந்தாங்க தேவரே நீங்களே குடுங்க" என்று நீட்டினார்.

நாயக்கரைக் கும்பிட்டுப் பணத்தை வாங்கிய பேயத்தேவர் பொன்னாசாரியிடம் ஒவ்வொரு நோட்டாய் பயபக்தியுடன் எண்ணிக் கொடுத்துக் கொண்டேயிருந்தார். எல்லாம் பழுப்பேறிய பத்து ரூபாய் நோட்டுகள். சில நோட்டுகளின் மடிப்பில் ஜீவராசிகளும் வசிக்கும் போலிருந்தது.

"பத்து... இருவது... முப்பது... நூத்தி எழுவது... நூத்திஎம்பது... நூத்தி..."

"யப்பே! நம்ம பொழப்பு போச்சப்பே..." என்று தும்பறுத்து ஓடிவந்த காளங்கன்றாய்க் கடையில் நுழைந்த சொட்டையனின் குரல்கேட்டு எண்ணுவதை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தார் பேயத்தேவர்.

"என்னாப்பா? என்னாச்சு?"

சொட்டையன் விக்கினான், விம்மினான்- பேச்சு வராமல் சைகையில் ஏதோ சொல்ல முயன்றான். கடைசியில் தொண்டைக்குள் சண்டையிட்ட துக்கத்தை விழுங்கிவிட்டுச் சொன்னான்: "ஆத்தா அழகம்மா நம்மளையெல்லாம் ஏச்சுட்டுப் போயிட்டாப்பே!". வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு குமுறிக் குமுறி அழுதான் சொட்டையன்.

பணம் எண்ணுவதை நிறுத்திவிட்டு இடிந்து சாய்ந்த பேயத்தேவரைக் கைத்தாங்கலாய்த் தாங்கினார்கள் நாயக்கரும் கடைக்காரர்களும். வாங்கிய பணத்தை நாயக்கரிடம் திருப்பிக் கொடுத்தார் பொன்னாசாரி. சோடா வாங்க கலர்கடை தேடி ஓடினான் ஒரு நகைக்கடைப் பையன்.

ஆகாயம் இடிந்து தன்மேல் விழுந்து அமுக்குவதாகப்பட்டது நினைவு தப்பிக்கொண்டிருந்த பேயத்தேவருக்கு...

வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் உதிர்ந்தாலும் மரத்திலிருந்து ஒரு பூ உதிர்ந்தாலும் இழப்பு இழப்புதான். மழைத்துளியில் எறும்பு மூழ்கினாலும் கடலுக்குள் கப்பல் மூழ்கினாலும் வலி வலிதான். அதனதன் நிலையில் அவரவர் துயரம் பெரியதுதான். துன்பத்தில் 'சிறுசு- பெருசு' என்பதெல்லாம் இடம் பொருள் ஏவல் குறித்த ஒப்பீடுகளல்லாமல் வேறென்ன?

பேயத்தேவர் கண்ணீர். வயசாக ஆகக் கண்ணீரும் முத்திப்போய்க் கெட்டிப்பட்டு விடுமோ?

கொஞ்சநஞ்ச வாழ்க்கையா? நினைவின் கடைசி இழை மனசுக்குள் ஊசலாடும் காலம்வரை மறக்கக்கூடிய சம்பவங்களா?

சோடிமாட்டில் ஒரு மாடு செத்துப்போக, இன்னொரு மாடு வாங்கி உழுவதற்குள் ஈரம் போய் விடுமே என்று ஒடிஞ்சு உட்கார்ந்தபோது "ஏ ஆம்பள! ஒத்த மாட்டோட இந்தத் தொத்த மாட்டப்பூட்டி உழுகவேண்டியதுதான...?" என்று நேக்காலைத் தன் கழுத்தில் மாட்டிக்கொண்டு மாட்டின் தேவையையும் பூர்த்தி செய்த மனுஷியல்லவா அவள்.

மாறிவரும் சமூகத்தில் மணவாழ்க்கை என்பது, ஆணால் கிட்டும் சௌகரியங்களைப் பெண்ணும், பெண்ணால் கிட்டும் சௌகரியங்களை ஆணும் சட்டப்படி திருடிக்கொள்ளும் சம்பிரதாயமாக இருக்கிறது.

கள்ளிக்காட்டு கலாசாரத்தில் அப்படி இல்லை. ஈரச்சாக்கும்- இத்தசேலையும்- அரைப்படி சோளமும்- அவத்தக் கஞ்சியுமே அன்றாடங்களாகி விட்ட ஒரு வறட்டு வாழ்க்கைக்கு வாக்கப்பட்டு வருகிற ஒரு பொம்பள திருடிக் கொள்வதற்கு சௌகரியங்கள் ஏதும் இல்லாததால் பாடுகளை மட்டுமே பகிர்ந்து கொள்கிறாள்.

அழகம்மாளின் இழப்பால் பேயத்தேவர் நினைத்தார் தன் 'பொழப்பி'ல் பாதி போய்விட்டதாக.

கானாவிலக்கில் இறங்கி, தன் உடல்பாரத்தின் பெரும்பாகத்தை வண்டிநாயக்கரின் தோளில் போட்டு வத்திப்போன உசுரும் தொங்கிப்போன தேகமுமாக மனைவியின் 'பொணம்'பாக்கப் போய்க்கொண்டிருந்தார் பேயத்தேவர். அவர் கண்ணுக்குக் காடு தெரியவில்லை; காட்டாமணக்கு வேலி தெரியவில்லை. காற்றின் உடுக்கைக்குப் பேயாடும் கருவேல மரங்கள் தெரியவில்லை. மாடு மேய்க்கும் சிறுவர்கள்- ஆடோட்டும் சிறுமிகள் யாரும் எதுவும் தெரியவில்லை அவர் கண்ணீர் மூடிய கண்களுக்கு. கள்ளிக்காட்டு சீவாத்திகள் மட்டும் "அழகம்மா அழகம்மா" என்று கதறுவதாக மட்டும் கேட்டது. ஓர் இரண்டு மைல் தூரத்தில்தான் செத்துக் கிடக்கிறது அவரோடு நாற்பத்தைந்து ஆண்டுகள் ஓடித்தேய்ந்தவளின் உடம்பு.

தன் வாழ்வின் எந்த நிலையிலும் உடைந்து போகாத பேயத்தேவர், பறந்து கொண்டே ஒரு பறவை பாறையில் இட்ட முட்டையாய் நொறுங்கிப் போனார். கட்டிப்போன குரலில் நாயக்கரின் காதோரம் கேட்டார்:

" நாயக்கர் அய்யா... இதத்தான் விதிங்கிறாகளோ?"

"எத"

"மகள வழியனுப்பச் சேத்துவச்ச காசு ஆத்தாள வழியனுப்பச் செலவாகுதே... அத..."- குலுங்கிய மூத பேயத்தேவரை இன்னும் கொஞ்சம் இறுக்கி இடுக்கிக் கொண்டார் நாயக்கர். அந்த இடுக்கல் ரொம்பத் தேவைப்பட்டது பேயத்தேவருக்கு.

"இழுத்துக்க பறிச்சுக்கன்னு இன்னும் ரெண்டுவருசம் கெடப்பான்னு நெனச்சனே... ஈனச் சிறுக்கி ஏச்சுட்டுப் போயிட்டாளே.

நாயக்கரின் கழுத்தில் விழுந்து பிசுபிசுத்தது

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லாமல் கொள்ளாமல் அழகம்மாளைப் பெண்பார்க்கப் போனபோது அவள் வீட்டிலில்லை. "வாங்க பொண்ணக் காட்றேன்... பொடி நடையாப் போகலாம்" என்று கூட்டிக்கொண்டு போனார் பொண்ணோட சிய்யான்.

ஏதோ சோட்டுக்காரி வீட்டில் சொட்டாங்கல்லு விளையாடிக் கொண்டிருக்கிறாள் என்பது மாதிரி "இந்தா! இந்தா!" என்று மூன்று மைல் நடத்திக்கொண்டு போய் முனியாங்கோயில் கரட்டியில் ஆடுமேய்த்துக் கொண்டிருந்த ரெண்டு மூன்று சிறுமிகளில் ஒருத்தியைக்காட்டி "அந்தா கோவம்பழ நெறத்துல சிவீர்னு துணிகட்டி தூக்குச் சட்டியோட ஒத்தக்கொம்பு மாட்ட வெரட்டி ஓடறாளே அவதான் அழகம்மா" என்று அடையாளம் காட்டினார் சிய்யான்.

அவள் முதல் சேலை கட்டியதே கல்யாணத்துக்குத்தான். அதுவும் இடுப்பைவிட்டு வழுக்காமலிருக்கக் கண்ணுக்குத் தெரியாமல் கத்தாழை நார் கட்டிவிட்டார்களாம். கடைசி வரைக்குமே செவக்கிச் சீல கட்டத்தெரியாது அவளுக்கு. கொசுவத்துக்குச் சுருட்டிச்சுருட்டி, சேலை மொத்தமும் செலவழித்து விட்டு, கெண்டைக்கால் மறைக்கத் துணியில்லாமல் எப்போதும் "பத்தும் பத்தாமல்" நிற்பாள் அவள். கடைசிவரை சேலை கட்டத்தெரியாத அந்தச் செல்லப்பெண்டாட்டி கோடிச்சேலை கேட்டுச் செத்துக்கிடக்கிறாள் ரெண்டுமைல் தூரத்தில்.

(வளரும்)



# தேசிய அபிவிருத்தி சார்பாக இலவசக் கல்வி முறைமை உண்மையில் வெற்றி கண்டுள்ளதா? (2)



சமத்துவம் என்பது கல்வி பெறவிரும்பும் தகுதியும் ஆர்வமும் கொண்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் சம வாய்ப்பு கிடைக்கும் வகையில் சாதி, மதம், இனம், வர்க்கம் , அமைவிடம் ஆகிய எவ்வித பேதங்களையும் பாராட்டாது வழங்குவதாகும். இது எய்தப்படுமெனின் உண்மையில் வெற்றி எனலாம். கல்வியைப் பெறுவதற்கான இயலளவோ அல்லது உளச் சார்போ இல்லாதோர் ஒரு சிலர் இருக்கலாம். அப்படி சிலர் இருப்பதனால் அதன் காரணமாக கல்வியில் சமத்துவம் இல்லை எனக் கூறிவிட முடியாது. ஆற்றல் இருந்தும் சமூக அந்தஸ்து அல்லது செல்வம் காரணமாக உயர் கல்வியை நிராகரிப்போரும் சிலர் இருக்கலாம். இதன் காரணமாக கல்வியில் சமத்துவம் நிறைவேற்றப்படவில்லை எனக் கூறி விட முடியாது.

1943 ஆம் ஆண்டில் கல்வியின் உயரிய சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்ட காலகட்டத்தில் இந்நாட்டில் இரு வகையான கல்வி முறைகள் இருந்தன. ஒன்று ஏழைக்குரிய கல்வி முறைமை. மற்றையது உயர் குடியினருக்குரியது. அரசாங்கம் மற்றும் உதவி பெறுகின்ற சிங்கள , தமிழ் பாடசாலைகளில் சுதேசிய மொழியில் ஏழைகளுக்கான கல்வி வழங்கப்பட்டது.

மற்றையது ஆங்கிலம் மற்றும் இரு மொழிப் பாடசாலை களில் கட்டணத்துடன் வழங்கப்பட்டது. கல்வியானது சுதேச மொழியிலா அல்லது ஆங்கிலத்திலா வழங்கப்பட்டது என்பது முறையே அது இலவசமாகவோ அல்லது கட்டணத்தின் அடிப்படையிலோ வழங்கப்பட் டது என்பதில் தங்கியிருந்தது.

உயர் தொழில் மற்றும் உயர் கல்விக்கான வாய்ப்பினை வழங்கிய ஆங்கிலக் கல்விக்கு செல்வந்தர்கள் ஆதரவு வழங்கிய அதேநேரத்தில் சுதேசிய மொழிக் கல்வி உயர் கல்வி வாய்ப்பினை ஏழைகளுக்கு மறுத்தது மட்டுமின்றி சுதேசிய ஆசிரியர், நொத்தாரிசு மற்றும் ஆயுள்வேத வைத் தியர் ஆகிய மூன்று தொழில்களுக்கு அப்பால் வேறு எந்தவித தொழிலையும் பெறும் வாய்ப்பினை ஏழைகளுக்கு வழங்கவில்லை.

உண்மையில் இந்த இரட்டை கல்வி முறைமை மற்றும் அரச கட்டுப்பாடு, கிறிஸ்தவ மிஷனரி கட்டுப்பாடு ஆகியவையும் இந்நாட்டில் இரட்டை சமூகங்களையும் இரு வகை மக்கள் கூட்டத்தையும் உருவாக்கின.

> "கல்வியானது சமூகப் பொறுப்பும் பொருளியல் ரீதியான உற்பத்தித்திறனும் கொண்டநேர்மையான , கட்டொழுங்குள்ள,தேசபக்தியுள்ள குடிமக்களை உருவாக்க வேண்டும்"

இந்நிலையில்தான் சமத்துவம் எய்தப்படுவதற்கு சகல பாடசாலைகளிலும் சகல மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங் களிலும் கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும் என கன்னங்கரா அறிக்கை விதந்துரைத்தது. அது மக்களால் உணர்ச்சிபூர்வமாக வரவேற்கப்பட்டதுடன், இதற்கு எதிரான எத்தகைய கருத்தும் அரசியல் தற்கொலைக்குச் சமமாக கருதப்பட்டது. இதன்படி 1945 ஓகஸ்டில் கன்னங்கரா அவர்கள் அரசாங்க சபையில் இலவசக் கல்விக்கான முன் மொழிவை சமர்ப்பித்து பின்வருமாறு குறிப்பிட்டிருந் தார்.

" எல்லா மட்டங்களிலும் இலவசக் கல்வி என்பது ஒரு சஞ்சீவியைப் போன்றது. இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் எனில் செல்வந்தர்களின் சொத்தான கல்வியை நாம் ஏழைகளின் சொத்தாக்கிவிடுவோம்''

இதன்படி 1945 ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் இலவசக் கல்வி பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை அமுல் செய்யப்பட்டமை இலங்கையின் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

### அரச மத்திய பாடசாலைகளின் உருவாக்கம்

பாடசாலை செல்லும் சமத்துவ வாய்ப்பு என்பது பிள்ளை நடந்து செல்லும் தூரத்தில் சகல வசதிகளும் உள்ள பாடசாலை இருந்தால்மட்டுமே அர்த்தமுள்ளதாய் இருக்கும்.மேலும் தமது பிள்ளைகளின் கல்விச் செலவுகளை ஈடுசெய்யமுடியாத பெற்றோர்க்கு தேவையான உதவிகளும் கிடைக்க வேண்டும்.இவ்வாறான கல்வி வாய்ப்பினை யதார்த்தமாகக் கொள்வதற்காக மத்திய பாடசாலைகள் உருவாக்கப் பட்டதுடன் ஒரு சில கிராமப்புற மாணவர்களுக்கேனும் றோயல், ஆனந்தாக்கல்லூரியைப் போன்று தரமான கல்வியை வழங்கவேண்டும் என்பதே கன்னங்கராவின் நோக்காக இருந்தது.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் உள்ள பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியை முடித்த மாணவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து சிறந்த ஆசிரியர்களைக் கொண்ட வளங்களையுடைய இந்த மத்திய பாடசாலைகளில் கல்வியை வழங்குதலே நோக்காக இருந்தது.

இதன் மூலம் ஒவ்வொரு பாடசாலையிலும் இடைநிலை வகுப்புக்களைக் கொண்டிருக்கும் சிரமம் காலப்போக்கில் அகற்றப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

அனேகமாக ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு மத்திய பாடசாலை இருந்தது.

இப் பாடசாலைகளில் பொதுக் கல்வி மட்டுமன்றி விளையாட்டு வசதிகள், தச்சுத் தொழில், நெசவு, குடிசைக்கைத்தொழில் மற்றும் விஞ்ஞானக் கல்வியும் வழங்கப் பட்டன.

தேர்தல்தொகுதியில் உள்ள ஏனைய ஆரம்ப,இடைநிலைப்பாடசாலைகள் இவற்றுக்கு ஊட்டற்பாடசாலைகளாக விளங்கி ஒரு 'கொத்தணி பாடசாலை முறைமை' நிலவியது எனலாம்.

பிற்காலத்தில் இவ்வாறான ஒருமுறைமை இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தம்பியப்பா காங்கேசபிள்ளை
முன்னாள் அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை

உண்மையில் கன்னங்கரா அவர்கள் இலவசக்கல்வி, மத்திய பாடசாலைகளின் ஸ்தாபிதம் ஆகியவற்றோடு நிற்காமல், மத்திய பாடசாலைகளில் அனுமதிபெறும் மீத்திறன் கொண்ட ஏழை மாணவர்களுக்கு இலவச இருப்பிடம்,உணவு வசதிகள் கிடைக்கக் கூடிய தரம் 6 இலிருந்து கற்பதற்குரிய புலமைப்பரிசில் திட்டத்தை யும் அறிமுகம் செய்துவைத்தார். (தொடரும்)

## த.தே.கூ-முஸ்லிம் காங்கிரஸ் இடையில் பேச்சுவார்த்தை

இனப்பிரச்சினைக்கான பொது அரசியல் தீர்வு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் இடம் பெற்றுள்ளது.

இனப்பிரச்சினைக்கான பொது அரசியல் தீர்வில் முஸ்லிம் மக்களின் பங்கு முக்கியமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில்நல்லெண்ண அடிப்படையில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. அந்த அடிப்படையிலேயே இன்றைய பேச்சும் அமைந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெறும் என சுரேஷ் பிரேமச் சந்திரன் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகம் ஹசன் அலி மற்றும் அதியுயர் பீட உறுப்பினர் சட்டத்தரணி பாயிஸ் ஆகியோரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராஜா,சுரேஷ் பிரேமச்சந்திரன்,செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ .சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து கடந்த 10 ஆம் திகதி அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் பேச்சுவார்த்தை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது . (ஸ்ரீ-2)

## இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த கூடுதல் முனைப்புக் காட்டவேண்டும்

### அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த கூடுதல் முனைப்புக்காட்டப்படவேண்டுமென சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பழையவற்றை நினைவுபடுத்துவதைவிட இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டு மக்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சேர்.பொன்னம்பலம் அருணாசலத்தின் 86ஆவது நினைவு நாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

பொன்னம்பலம் அருணாசலம் நாட்டுக்காக அரிய சேவைகளை ஆற்றியுள்ளதாகவும் தமிழ்சிங்கள மக்கள் பழைய குரோதங்களை மறந்து நாட்டின் நன்மைக்காக அர்ப்பணிப்புடன் பாடுபடவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## ஒரு இலட்சத்து 15ஆயிரம் பேர் கிளி.மாவட்டத்தில் மீள்குடியேற்றம்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடம் ஒரு இலட்சத்து 15ஆயிரம் பேர் மீள்குடியேறியுள்ளதாக கிளிநொச்சி செயலக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்களுக்கான அரசின் வீட்டுத்திட்டம் விரைவுபடுத்தவேண்டும் என்று மீள்குடியேறிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அப்பகுதியில் அரசின் உதவியுடன் பலவீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக செயலக வட்டாரங்களில் இருந்து மேலும் தெரிய வந்துள்ளது. (ஸ்ரீ-3-10)






தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு கச்சாய் தெற்கு கலைமகள் முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் டாக்டர் லயன் எஸ்.எஸ்.அருளானந்தம் கருத்துரை வழங்குவதையும் அருகில் கழகத்தலைவர் லயன் எஸ். தேவகுமார், முன்னாள் தலைவர்கள் லயன் டாக்டர் இ.கந்தையா, லயன் சி. சரவணமுத்து ஆகியோர் அமர்ந்திருப்பதையும் அறிவூட்டும் கருத்துக்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## மகரஜோதி தரிசன கிரியா நிகழ்வுகள்

(மந்துவில்)

யா/கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் இன்று மாலை 2 மணிக்கு மகர ஜோதி தரிசன கிரியா நிகழ்வுகள் ஆரம்பமாகும். ஐயப்ப சாமியின் புனிதப் பெட்டி நர்த்தன விநாயகர் ஆலயத்தில் இருந்து சாமிமார்கள் எடுத்து வருவார்கள். தொடர்ந்து மகர ஜோதிப் பெருவிழா பிரதமகுரு சாமி இ . அரிகரசுத குருக்கள் குருசாமி தலைமையில் நிகழவுள்ளது. (ஸ்ரீ-102)



யாழ்ப்பாணம் சிந்தனைக் கூடம் அபிவிருத்திக்கான அமைப்பின் ஏற்பாட்டில் வடகிழக்கு மாகாணத்தின் காணி உரிமைகளும் அவை எதிர் நோக்கும் பிரச்சினைகளும் என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நேற்று முன்தினம் தியாகி அறக் கொடை நிலையத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் வட-கிழக்கு மாகாண ஓய்வு பெற்ற காணி ஆணையாளர். க.குருநாதன் கருத்துரை வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட வர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அ.டெனிஸ்)

## சமுர்த்தி மகாசங்க கூட்டம்

(கரவெட்டி)

பருத்தித்துறை செயலகத்தில் சமுர்த்தி மகாசங்க கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தலைமையில் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் 10.30 மணிக்கு சமுர்த்தி வங்கிக் கூட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ள தாக பருத்தித்துறைப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

(ஸ்ரீ-3-24)

## அவிசாவளை வீதி விபத்தில் அறுவர் பலி; எண்மர் காயம்

(கொழும்பு)

அவிசாவளை கொஸ்கம பிரதேசத்தில் இடம்பெற்ற மோசமான வீதி விபத்தில் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். பேருந்து ஒன்றும் வான் ஒன்றும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொடூர விபத்து நேற்று அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளதாகவும் எட்டு பேர் காயமடைந்துள்ளதாகவும் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பான விபரங்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை எனவும் விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இந்திய அரசின் நிவாரணப்பொருட்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பு, அம்பாறை உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்காக ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் இந்திய அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த நிவாரணப் பொருட்களை உடனடியாக மட்டக்களப்பு அம்பாறை உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்தியத்தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிவாரண தொகுதியில் குழந்தைகளுக்கான பால்மா வகைகள், உலருணவு பொருட்கள், மருந்து வகைகள் உள்ளிட்ட பொருட்கள் அடங்குகின்றன.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணப் பொருட்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இது தவிர பல்வேறு அமைப்புக்களும் வெள்ள நிவாரண சேகரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

## புலிகளுடன் தொடர்புடையதாக கூறி சுவிஸில் கைதானோரின் வீடுகளில் சோதனை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தின் பேரில் சுவிற்ஸர்லாந்தில் கைது செய்யப்பட்ட 10 சந்தேக நபர்களின் வீடுகளில் அந்நாட்டு பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

சுவிஸ் சட்டமா அதிபர் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத அமைப்பில் அங்கம் வகித்தமை மற்றும் சட்டவிரோத நிதிப் பரிமாற்ற நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பில் 10 தமிழர்கள் சுவிஸில் கைது செய்யப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு சொந்தமான 23 இடங்களில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கும் சுவிஸில் இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கும் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கடந்த பல வருடங்களாக புலம்பெயர்ந்த தமிழர்களிடம் இருந்து இவ் அமைப்பிற்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் சுவிஸ் சட்டமா அதிபர் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவிஸில் பல மில்லியன் பிராங்க் பணம் இவர்களால் திரட்டப்பட்டு இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் விடுதலைப்புலிகள் ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொண்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## எலிசபெத் மகாராணி இலங்கை வரவுள்ளார்

(கொழும்பு)

இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணி எதிர்வரும் 2013ஆம் ஆண்டு அம்பாந் தோட்டைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுக்கான மாநாடு அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக எலிசபெத் மகாராணி மற்றும் 53 நாடுகளின் தலைவர்களும் அம்பாந்தோட்டைக்கு விஜயம் செய்யவுள்ளனர். தங்காலையில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான மாநாடுகளின் மூலம் பிரதேச மக்கள் அதிக நன்மைகளை பெற்றுக் கொள்வார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள் ளார். பிரதேசத்தின் பாதைகள், வீதிகள், ஹோட் டல் மற்றும் சகல உட்கட்டுமான வசதிகளும் மேம்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## 3 வயது சிறுமி மீது பாலியல் வல்லுறவு

கந்தளாய் தம்பலகாமம் பிரதேசத்தை சேர்ந்த மூன்று வயது சிறுமியை 50 வயது நபரொருவர் நேற்று முன்தினம் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக புகாரிடப்பட்டுள்ளது.

வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சிறுமி மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சிறுமியை வல்லுறவுக்குட்படுத்திய நபர் தலைமறைவாகியுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# இலங்கையில் ஓரிரு மாதங்களில் உணவு நெருக்கடி தோன்றும் அபாயம்

## ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் சில மாதங்களில் உணவு நெருக்கடி தோன்றும் அபாயம் உள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த உணவு பொருட்களுக்கான நெருக்கடியை எதிர்கொள்வதற்கு தயாராகுமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவிவரும் மோசமான காலநிலை காரணமாக நாட்டின் உணவு உற்பத்தி மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. மழை வெள்ளம் காரணமாக நாட்டில் உள்ள பெரும்பாலான விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் விவசாயிகள் பெரும் இழப்பினைச் சந்தித்துள்ளனர்.

இந்த இழப்பினால் நாட்டின் மொத்த உணவு உற்பத்தியில் 20% வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இலங்கையில் உணவு பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இலங்கை அடுத்துவரும் ஓரிரு மாதகாலத்தில் உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் அபாயம் உள்ளதென பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனையடுத்து அலரி மாளிகையில் அவசர அவசரமாக முக்கிய கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் உணவுத்தட்டுப்பாட்டை எவ்வாறு எதிர்கொள்வது என ஆலோசனை நடத்தினார்.

இக் கலந்துரையாடலில் பிரதமர் டி.எம். ஜயரட்ண மற்றும் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ராஜித சேனாரட்ண, மகிந்த சமரவீர, நிமல் சிறிபால டி சில்வா, புஸ்பகுமார, ராஜித சேனாரட்ண உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது திடீர் காலநிலை மாற்றத் தால் உலகளாவிய ரீதியில் ஏற்படவுள்ள உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் அடுத்துவரும் இரு மாத காலத்துக்குள் ஏற்படவுள்ள உணவுப் பொருள் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதற்கு தயாராகுமாறும் பணிப்புரை விடுத்தார்.

(ஸ்ரீ-2)

## புதிய தொழிற்பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினர் புதிய தொழிற்பயிற்சி களை கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் அமைந்துள்ள இவ்வதிகார சபையின் கட்டடத் தொகுதியில் ஆரம்பித்துள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பில் நீர்க்குழாய் பொருத்துதல், கணனி வன்பொருள், கணனி மென்பொருள், மரப்பொறியியல், ஆடை உற்பத்தி ஆகியவற்றுக் கான ஆறுமாத கால தேசிய தொழில்திறன் சான்றிதழுக்கான (NVQ.III, IV) கற்கை நெறிகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

இக்கற்கை நெறிக்கு இதுவரை காலமும் பதிவினை மேற்கொள்ளாத மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமைகாலை 10 மணிக்கு தொடர்பு கொள்ளு மாறு நிலையப் பொறுப்பதிகாரி இ.விஜிதரன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இந்திய இழுவைப்படகின் ஆக்கிரமிப்பை எமது பகுதியிலிருந்து முற்றாக நீக்குங்கள்


## எழுவைதீவு மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவை படகுகளின் ஆக்கிரமிப்பை தமது பகுதியிலிருந்து முற்றாக நீக்குமாறு கோரி எழுவைதீவு புனித தோமையார் கடற்றொழிலாளர் சங்க மீனவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை எழுச்சிப் போராட்டமொன்றை மேற்கொண்டனர்.

தாம் வாழ்வாதாரத் தொழிலாக கடற்றொழிலை மேற்கொண்டு வருவதாகவும் அத்தகைய கடற்றொழில் தற்சமயம் இந்திய இழுவைப் படகின் ஆக்கிரமிப்பிற்குட்பட்டுள்ளதாகவும் தமது கடற்றொழில் உபகரணங்கள் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தாம் கடற்றொழிலை மேற்கொள்ளும் இடங்கள் வழித்து துடைக்கப்படுவதால் மிகுந்த வறுமை நிலைக்குட்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.



இது குறித்து உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டபோதும் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்த அவர்கள் இவ்வாறான நிலை தொடருமாயின் தாம் பட்டினியால் மடிந்து போகும் நிலை ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை இது குறித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிகள் ஊர்காவற்றுறை பொறுப்பாளருக்கு மகஜர் கையளிக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# குவைத்தில் எஜமானர்களால் பாதிக்கப்பட்ட 130 பணிப்பெண்கள் நாடு திரும்பவுள்ளனர்

குவைத்தில் வீட்டுப் பணிப்பெண்களாக வேலைக்குச் சென்ற 130 பேர் தமது எஜமானர்களால் நெருக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் இலங்கைக்கு திருப்பி அழைத்து வரப்படவுள்ளனர்.

தமது நிலைமை பாதுகாப்பாக இல்லையென்று இவர்கள் முறையிட்டதைத் தொடர்ந்து இவர்களைத் திருப்பியழைக்க வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தங்களுக்கு சம்பளம் முறைப்படி வழங்கப்படவில்லையென்று இவர்களுள் பலர் முறைப்பாடு செய்துள்ளனர். தமது எஜமானர்கள் மூலம் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் பலர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் எல்லோரும் தற்போது இலங்கைத் தூதரகத்தின் பொறுப்பில் உள்ள பாதுகாப்பான ஒரு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதேபோன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மேலும் 400 பேர் ஏற்கனவே இந்த இல்லத்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## உழவர் பெருவிழா

தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்.அராலி மாவத்தை விளையாட்டுக் கழக ஏற்பாட்டில் மாபெரும் உழவர் பெருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 6 மணிக்கு அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலய முன்றலிலிருந்து மரதன் ஓட்டத்துடன் ஆரம்பமாகும் உழவர் பெருவிழா மறுநாள் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் கைக்கொடி, மாட்டுச்சவாரி, வயோதிபர் வேகநடை, கயிறு இழுத்தல், மிதிவண்டி ஓட்டம், காட்சி உதை பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளது.

இந்த விழாவில் பிரதம அதிதியாக யாழ். இந்திய தூதுவர் காரியாலயத்தைச் சேர்ந்த மகாலிங்கம், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ)

# கடலுக்குச் சென்ற 11 மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்

(கொழும்பு)

மட்டு., அம்பாறை மற்றும் திருகோணமலை உள்ளிட்ட இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கடந்த சில வாரமாக அடைமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் அம்பாறை மாவட்ட பொத்துவிலில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 11 மீனவர்கள் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் இலங்கை கடற்படையினரும் விமானப்படையினரும் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் ஒரு சில உடைந்த மீன் பிடிப்படகுகள் பொத்துவில் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

இது இவ்வாறிருக்க காலநிலை மோசடைந்து வருவதனால் யாரும் கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம் என வானிலை அவதான மையம் அறிவித்துள்ளது.

இதேவேளை மோசமான காலநிலை காரணமாக அநேகமான கிழக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லவில்லை. இதனால் அவர்கள் பொருளாதார ரீதியாக பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி தேர்தலில் அபேட்சகர்கள் தெரிவில் நியமங்களை வகுக்க வேண்டும்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமது அபேட்சகர்களை தெரிவு செய்வதற்கு நியமங்களை வகுத்துக் கொள்ள வேண்டுமெனவும் இதை பொதுமக்களுக்கு பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும் எனவும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

அடிமட்ட மக்களுடன் நேரடியாக தொடர்பு கொள்பவர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களே. எனவே இந்தத் தேர்தல் முக்கியமானது என அது கூறியுள்ளது.

உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் அந்தந்த உள்ளூராட்சி மன்றத்தின் ஆள் புலத்தில் வசிப்பராகவும் உள்ளூராட்சி மன்றத்தின் கடமைகளை மற்றும் பொறுப்புக்களை அறிந்தவர்களாகவும் மக்களின் தேவைகளை விளங்கியிருப்பவராகவும் இருக்க வேண்டும் என பவ்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இவர்கள் மக்களுக்கிடையே சமாதானம், இணக்கப்பாடு என்பவற்றை ஊக்குவிப்பவராகவும் இருக்கவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை பெண்கள் மற்றும் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தில் கூடிய கவனம் செலுத்துவதுடன் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் குறைந்த பட்சம் 30 சதவீதம் வரை இருக்க வேண்டும் என தேர்தல் கண்காணிப்பு மையமான சீ.எம்.ஈ.வி.யின் இணைப்பாளர் எம்.எச்.எம்.அஜ்மீர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.01
14

- ★ 1539 - ஸ்பெயின் கியூபாவை இணைத்துக் கொண்டது.
- ★ 1690 - கிளாரினெட் இசைக்குருவி ஜேர்மனியில் வடிவமைக்கப்பட்டது.
- ★ 1724 - ஸ்பெயின் மன்னன் ஐந்தாம் பிலிப் முடி துறந்தான்.
- ★ 1761 - இந்தியாவில் பானிப்பட் போரின் மூன்றாம் கட்டம் ஆப்கானியர்களுக்கும் மராட்டியர்களுக்கும் இடையில் இடம்பெற்றது. ஆப்கானியர்களின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது.
- ★ 1784 - அமெரிக்கப் புரட்சிப் போர்: ஐக்கிய அமெரிக்கா இங்கிலாந்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.
- ★ 1814 - நோர்வேயை டென்மார்க் மேற்கு பொமிரானியாவுக்காக சுவீடனுக்கு விட்டுக்கொடுத்தது.
- ★ 1858 - பிரான்ஸ் மன்னன் மூன்றாம் நெப்போலியன் கொலைமுயற்சி ஒன்றிலிருந்து தப்பினான்.
- ★ 1907 - ஜமெய்க்காவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.
- ★ 1913 - கிரேக்கம் துருக்கியரை பிசானி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் வென்றனர்.
- ★ 1943 - இரண்டாம் உலகப் போர்: பிராங்கிளின் ரூஷ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் கசபிளாங்காவில் சந்தித்து போரின் அடுத்தகட்ட நகர்வுக்கான தீர்மானங்களை எடுத்தனர்.
- ★ 1950 - சோவியத் ஒன்றியத்தின் மிக்-17 போர் விமானம் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- ★ 1969 - ஹவாயிற்கு அருகில் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 27 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1974 - திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலிருந்து பிரித்து புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- ★ 1994 - ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் மற்றும் ரஷ்யத் ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் கிரெம்ளினில் புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர்.
- ★ 1995 - சந்திரிகா அரசு - விடுதலைப் புலிகள் 3ஆம் கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.
- ★ 1998 - ஆப்கானிஸ்தானின் சரக்கு விமானம் ஒன்று பாகிஸ்தானில் மலை ஒன்றில் மோதியதில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- ★ 1977 - நாராயண் கார்த்திகேயன், கார் பந்தய வீரர்

### இறப்புகள்

- ★ 1898 - லூயி கரோல் ஆங்கில எழுத்தாளர், கணிதவியலாளர் (பி.1832)
- ★ 1901 - சார்ள்ஸ் ஹெர்மைட், பிரெஞ்சு கணிதவியலர் (பி.1822)
- ★ 1957 - ஹம்பிறி போகார்ட், அமெரிக்க நடிகர் (பி.1899)
- ★ 1978 - கியோடல், ஆஸ்திரிய அமெரிக்க, கணித, மெய்யியல் அறிஞர் (பி.1906)
- ★ 2000 - எம்.வி.வெங்கட்ராம், தமிழக எழுத்தாளர் (பி.1920)

**2005 - சனிக் கோளின் டைட்டான் என்ற நிலாவில் ஐரோப்பாவின் இயூஜென் விண்கலம் இறங்கியது.**

# வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதோருக்கு

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய கல்வியாண்டுக்குத் தெரிவான மாணவர்களில் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதோர் உடனடியாகப் பதிவு செய்யுமாறு பீடாதிபதி க.பேர்னாட் அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2011 ஆம் ஆண்டுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்காக கடந்த 10ஆம் திகதி பதிவுகள் இடம்பெற்றன.

பதிவுகளுக்கு இந்துசமயம், கிறிஸ்தவ சமயம், உடற்கல்வி, விவசாயம், ஆரம்பக் கல்வி, வணிகக் கல்வி ஆகிய ஆறு பிரதான பாடநெறிகளுக்கு வவுனியா தேசிய கல்வியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மொத்தம் 157 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 121பேர் தம்மை இதுவரை பதிவு செய்துகொண்டுள்ளனர். மிகுதி 36 பேர் இதுவரை பதிவுசெய்துகொள்ளவில்லை. இவர்களில் 8 பேர் வெவ்வேறு காரணங்களுக்காக தமது தெரிவுகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என அறிவித்துள்ளனர். மீதியாக உள்ள இந்துசமயம் 2பேர், கிறிஸ்தவ சமயம் 1, உடற்கல்வி 5பேர், விவசாயம் 5பேர், ஆரம்பக்கல்வி 8பேர், வணிகக்கல்வி 7பேர் என மொத்தம் 28 பேர் தம்மை இதுவரை பதிவு செய்துகொள்ளவில்லை.

வெவ்வேறு காரணங்களுக்காக தம்மை பதிவுசெய்துகொள்ள விரும்பாதவர்கள் அல்லது வேறு பயிற்சி நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு வேறு கல்வியியற் கல்லூரிகளில் தம்மைப் பதிவுசெய்து கொண்டவர்கள் உடனடியாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிக்கு அறிவிக்கவும். அவ்வாறானவர்களுக்குப் பதிலாக காத்திருப்போர் பட்டியலிலிருந்து புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு இது வாய்ப்பாக அமையும்.

அவ்வாறல்லாத பதிவு செய்ய விரும்புபவர்கள் உடனடியாக தம்மைப்பதிவு செய்து கொள்ளவேண்டும். தவறின் அவர்களின் தெரிவு இரத்துச் செய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலிலிருந்து புதிய மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

வெள்ளம், போக்குவரத்துக் காரணமாக குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உடனடியாக வருகை தரமுடியாதவிடத்து தொலைபேசி மூலமோ அல்லது வேறு வழிகளிலோ தமது பதிவை உறுதிப்படுத்திக்கொள்ள முயற்சி செய்யவும்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த இரண்டு ஆண்டுகள் மாணவர்களை அனுமதிக்க முடியாத நிலையிலிருந்து இவ்வாண்டு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கு பல கஷ்டங்கள் மத்தியில் முயற்சி செய்து வருகின்றது. இந்நிலைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் உதவியாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ)

# சுகாதாரம் தொடர்பான கலந்துரையாடல்


(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் சுகாதாரம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்ற கலந்துரையாடலில் வடமராட்சிப் பகுதியில் சுகாதாரத்தைப் பேணல் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

இதனை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் ஏற்பாடு செய்திருந்தார்.

இக் கலந்துரையாடலில் கரவெட்டி பருத்தித்துறைப் பகுதிகளைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் உள்ளூராட்சி திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-3-10)



நூலக முகாமைத்துவம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான வினைத்திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக புலமைப்பரிசில் பெற்று நேற்று முன்தினம் சிங்கப்பூருக்குச் சென்ற யாழ். பொதுநூலகத்தின் தலைமைநூலகர் கே.தனபாலசிங்கம் தலைமையிலான அறுவர் அடங்கிய குழுவினர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாநகரமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜா ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# பாதுகாப்பு செயலர் கோத்தபாய அமெரிக்காவுக்கு இரகசிய பயணம்



(கொழும்பு)

இஸ்ரேலுக்கான விஜயத்தை மேற் கொண்டிருந்த பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அங்கிருந்து தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி இணையத்தளம் இதனை வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளரின் அமெரிக்காவுக்கான பயணத்தை பாதுகாப்பு அமைச்சு இரகசியமாக பேணிவருகின்றது.

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு லண்டனில் ஏற்பட்ட நிலைமை, பாதுகாப்பு செயலாளருக்கும் ஏற்படலாம் என்ற அடிப்படையில் இந்தப் பயணம் இரகசியமாகப் பேணப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே, பாலஸ்தீனியர்களுக்கு தனிப்பட்ட நாடு ஒன்று தேவை இல்லை என அவர் வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றின் காரணமாக கோத்தபாய ராஜபக்ஷ சர்வதேச ரீதியாக விமர்சனத்துக்கு உள்ளாகி இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஸ்ரீ-2)

# பாதிக்கப்பட்டோருக்கு உடன் நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மக்கள் நலன்களுக்காக அரச அதிகாரிகள் எடுக்கின்ற தீர்மானத்திற்கு ஆதரவளிக்க அரசாங்கம் எப்போதும் தயார் என்று அவர் தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் தங்கி இருக்கும் ஹிங்குராகொடை ஆனந்த பாலிகா கல்லூரிக்கும் நேற்று முன்தினம் ஜனாதிபதி விஜயம் செய்து அங்கு மக்களின் தேவைகளைக் கேட்டறிந்தார்.

அவ்வேளையிலே அரசாங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மேற்கண்டவாறு அறிவுறுத்தினார்.

சுற்றறிக்கைகளுக்குள் முடங்கிக் கிடக்காமல் திடீர் இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனுக்குடன் அவசர நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தத் திடீர் அனர்த்தம்காரணமாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் சாதாரண மக்களாவர். அவர்களுக்காக உடனுக்கு உடன் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வது எம்மனைவரினதும் பொறுப்பாகும்.

இப்படியான சந்தர்ப்பத்தில் அலுவலகங்களுக்குள் நேர காலத்தைக் கழிப்பது எந்த அரச அதிகாரியினதும் கடமையல்ல என்றும் அதேநேரம் இன, மத, குல, நிற, கட்சி பேதங்கள் பாராது சகலரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய சந்தர்ப்பம் இதுஎன்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களைப் பார்வையிடவென பொலநறுவை மாவட்டத்தின் வெவ்வேறு பிரதேசங்களுக்கும் ஜனாதிபதி நேரில் சென்று மக்களின் தேவைகளைக் கேட்டறிந்துள்ளார். (ஸ்ரீ-2)

# 61 வருடங்களின் பின் கொழும்பின் வெப்பநிலை 18.8°C ஆக பதிவு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தின் வெப்பநிலை நேற்று 18.8 பாகை செல்சியஸாக பதிவாகியதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இது சுமார் 61 வருடங்களின் பின்னர் பதிவாகிய ஆகக்குறைந்த வெப்பநிலையாகும்.

இவ்வெப்பநிலை நேற்றைய தினம் முழுவதும் தொடர்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை நுவரெலிய மாவட்டத்தின் வெப்பநிலை 7.9 பாகை செல்சியஸாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெப்பநிலை 16.9 பாகை செல்சியஸாகவும் பதிவாகியதாக அந்நிலையம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு முன்னர் அவசரகால சட்டம் நீடிக்கப்பட வேண்டும்

## ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேண்டுமென ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது அவசியமற்றதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர் அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சியினர் பிரசாரம் நடத்துவதனை தடுக்கும் நோக்கில் 1970ஆம் ஆண்டு அவசரகாலச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரசகாலச் சட்டத்தின் மூலம் தேர்தல் பிரசாரங்களை சுதந்திரமான முறையில் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து இரண்டாண்டுகள் பூர்த்தியாகவுள்ள நிலையில் தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது நியாயமற்றதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் யுத்தத்தை காரணம் காட்டி அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீடித்ததாகவும், நியாயப்படுத்துவதற்கு எவ்வித காரணங்களும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பயங்கரவாத நடவடிக்கைகள் மீளவும் தலைதூக்காமல் இருப்பதனை உறுதிசெய்யும் நோக்கில் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# அரியாலை கிழக்கில் 15 வருடங்களின் பின் மக்கள் நேற்று மீள்குடியமர்வு

(கொழும்புத்துறை)

அரியாலைகிழக்கு மற்றும் பூம்புகார் பிரதேசங்களில் நேற்றுத் தொடக்கம் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரியாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்ததையடுத்து 15 வருடங்களின் பின்னர் மேற்படி பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-51)

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற தேர்தல்

# நியமனப் பத்திர தாக்கல் திகதியை நீடிக்குமாறு எவரும் கோரவில்லை

## தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

தற்போது கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக அங்கு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் காலப்பகுதியை நீடிக்குமாறு எந்தவொரு அரசியல் கட்சியும் தேர்தல் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கவில்லை என தேர்தல் திணைக்கள உயர் அதிகாரியொருவர் இணையத்தளமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கு கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் காலப்பகுதியை நீடிக்குமாறு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்தால் மாத்திரமே இது பற்றி கலந்தாலோசிக்க முடியும் எனவும் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டால் மாத்திரமே கூட்டத்தின் பிரகாரம் தேர்தல் திணைக்களத்தால் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் தற்போது கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக அங்கு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் காலப்பகுதியை நீடிக்குமாறு தேர்தல் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் 19 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 11 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் விரைவில் தேர்தல் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



சித்தன்கேணி

அருள்மிகு ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த

# தைப்பொங்கற் பெருவிழா-2011

**நாககன்னியம்பாள் மெய்யடியார்களே!**

நிகழும் மங்களகரமான விரோதி வருடத் தைத்திங்களில் கொடியேற்றத்தோடு (15.01.2011) சனிக்கிழமை அன்று கார்த்திகை நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய தைத்திங்கள் முதல் நாள் காலை 8.00 மணியளவில் அபிஷேக அலங்காரத்தோடு சோட சதீப தூபங்களோடு நாக கன்னியம்மன் நாகத்தில் திரு வீதியுலா எழுந்தருளி தீ மிதிப்பு வைபவம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் கலந்து எம் பெருமாட்டியைத் தரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோ.

**தைப்பொங்கல் 15.01.2011 தை முதல் சனிக்கிழமை பெருவிழாவும் 12 மணியளவில்**

# தீ மிதிப்பு வைபவம்

**தீர்த்தம், கொடியிறக்கம் 22.01.2011 சனிக்கிழமை வைரவமடையும் நடைபெறும்**

## கிரியைகளை சிறப்புற நிகழ்த்துபவர்

ஆலய பிரதம சித்த ஞானகுரு இந்திரன் ஐயா

அருளாசியுரை-ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)

பஜனைப்பாடல்களும் சிறப்பு சைவச் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

*"அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்"*

விளம்பர அனுசரணை
சுப்றா (14) கல்வி நிறுவனம்

சித்தன்கேணி
அருள்மிகு ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலயம்.

(அ-2146)

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா



# ஈழத்து சபரிமலை, யாழ் கோண்டாவில் சபரீஷ ஐயப்பன் தேவஸ்தான மகரஜோதி தரிசன சிறப்புச் செய்தி

## ஆதீன முதல்வரின் அருளாசி



அன்புள்ளம் கொண்ட மெய்யடியார்களே! ஆன்மீக முயற்சிகள் எல்லாம் ஊனினை உருக்கிஉள்ளொளிபெருக்கி என்ற மாணிக்கவாசக சுவாமிகளின் கூற்றுக்கு அமைவானவை. ஐயப்பசாமிமார்கள் அறுபதுநாள் நோன்பிருந்து மகரஜோதி தரிசனம் காண்பது என்பது இறையருளின் பாற்பட்ட செயலாகும்.

யாழ். கோண்டாவில் சபரீஷ ஐயப்பன் தேவஸ்தானத்தில் கிரியா பூர்வமாக நடைபெறும் மகரஜோதியை காணும் அனைவருக்கும் நல்லாசியும் ஐயப்பன் அருளும் கிடைக்க குருபாதம் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## ஜோதி காணுங்களே!



இருமுடி சுமக்கும் சாமிகளே! உங்கள் இதயம் ஐயப்பன் கோயில்களே! கோண்டாவில் சபரீஷனாலயத்தில் மனமாசகற்றி மகரஜோதி காணுங்களே

மதுரகவி-காரை M.P அருளானந்தன் (ஆசிரியர்)


## வேண்டுதல்



இருமாத விரதிகளினது தரிசனத்தின் சிகரமான நிகழ்ச்சி மகர ஜோதியாகும். உலக நாடுகளிலிருந்து வரும் ஐயப்ப சாமிமார் கள் இலட்சக்கணக்கான பக்த அடியார்கள்பரவசத்துடன் தரிசனம் காண்பது கண்கொள்ளாக் காட்சியாகும். இன்று கோண்டாவில் சபரீஷ ஐயப்பன் ஆலயத்தில் நடைபெறும் மகரஜோதி தரிசனம் சிறப்புற் றமைய என் ஐயப்பன் பாதார விந்தம் பணிந்து வேண்டுகின்றேன்.

இறைபணியில் நயினை, சிவத்திரு.கு.மகேசராசா,

## ஆசியுரை



"தெய்வீகம் என்பது தன்னைத்தான் ஒறுத்து உண்மையை உணரத் தலைப்படும் போது ஏற்படும் உணர்வாகும்." இத்தகைய உணர்வுக்கு வழி காட்டுவது சபரிமலை தர்ம சாஸ்தாவின் விரத நியதிகளும் மகரஜோதி தரிசனமும் ஆகும்.

இன்று எமது ஆலயத்தில் நடைபெறும் மகர ஜோதி தரிசனம் கிரியா பூர்வமான நிகழ்வுகள் சிறப்புற்றமைய சபரீஷ ஐயப்பன் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசி வழங்குவதும் அவன் அருளேயாம்.


பிரதம குருசாமி கி.அரிகரசுதக்குருக்கள்,
ஈழத்துச் சபரிமலை, யாழ். கோண்டாவில் சபரீஷ ஐயப்பன் தேவஸ்தானம்.

## மகரஜோதி

மகரஜோதி தரிசனம் காண்பதற்கு, கார்த்திகை மாதம் 1ஆம் திகதி விரதம் ஆரம்பமாகி, தைப்பொங்கல் தினத்தன்று சபரீஷ ஐயப்பன் தர்மசாஸ்தாவில் இருந்து தோன்றும் ஒளி பார்க்கும் வரை உள்ள காலம் விரதகாலமாகும். இன்று கோண்டாவில் சபரீஷ ஐயப்ப தேவஸ்தானத்தில் நடைபெறும் மகரஜோதி கிரியா பூர்வ நிகழ்வுகள் யாவும் சிறப்புற அமைய ஐயன் அருள்வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. கமலாதேவி குணசிங்கம்
செயலாளர், தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றம்.

## மகரஜோதி காட்டப்பா! ஐயப்பா!!



காடுமலை கடந்து வரும் சாமிமார்கள்
கண்களெல்லாம் உன் உருவே ஐயப்பா-நீ
ஞானமொழி பேசுகின்ற பாலனப்பா
ஞான ஒளி தந்திடவே வாருமப்பா /
கானகத்தில் வாழுகின்ற ஐயப்பா
கடும் விரதம் காத்துவாறோம் ஐயப்பா
கருணை உள்ளம் தரவேண்டும் ஐயப்பா
கண்ணெதிரே மகரஜோதி காட்டப்பா

சபரீஷ வாசம் ஈழவூர் சைப்புலவர், சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம்சாமி, கோப்பாய்

சாமியே சரணம் ஐயப்பா!
கணனி வடிவமைப்புக்கள் ஒவ்(F) செற் அன்ட் ஸ்கிறீன் பதிப்புக்கள், பொலிமர் இறப்பர் முத்திரைகள் நீங்கள் விரும்பும் அமைப்பில் இன்றே செய்திட நாடவேண்டிய இடம்
**ஸொம்பவி பதிப்பகம்**
276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2224143 , 077 6184425
கரந்தன் வீதி, நீர்வேலி

மகரஜோதியே சரணம் ஐயப்பா!
நிதானவிலை, நம்பிக்கை நாணயமிக்க பல்பொருள் விற்பனையில் கைதேர்ந்தவர்கள்
**விநாயகர் வாணிபம்**
பலாலி வீதி, கோண்டாவில்

பந்தள மாமணியே! மகர ஜோதியே! சரணம் ஐயப்பா!
மரம், பலகை, தீராந்தி, விறகு தளபாட வகைகள் நிதானம், தரம், உத்தரவாதத்துடன் விற்பனை செய்பவர்கள், ஒப்பந்த வேலைகள் குறித்த தவணையில் நிறைவேற்றுநர்கள்
P.சேகர் **கிறிஸ்துதரன் மரத் தொழிற்சாலை**
ஆணித் தொழிற்சாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

முதலில் தூசியை கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம்.

-பிஷப் பார்க்லி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கையைக் காப்பாற்ற பாவதோஷம் நீக்க வேண்டும்

இயற்கை அனர்த்தத்தினால் இலட்சக்கணக்கான மக்கள் பேரவலத்தை சந்தித்துள்ளனர். சற்றேனும் விட்டுக்கொடுக்காமல் பெய்துவரும் கடும்மழையால், உயிரிழப்புகளும் தொற்று நோய்களும் அதிகரிக்கும் ஆபத்தும் உண்டு.

தொடர்ந்தும் மழை பெய்தால் நிலைமை மோசமாகும் என்ற பயங்கரமான சூழல் காணப்படுகின்றது. இந் நிலையில் மக்களைக் காப்பாற்ற யாராலும் முடியாது என்ற நிலைமை உருவாகிவிட்டது.

எனவே இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை அந்த இறைவனே காப்பாற்ற வேண்டும்.

இயற்கையின் சீற்றம் இறைவனின் சீற்றம் என்ற கருத்தியல் மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து நிலவுகின்றது.

இந்த கருத்தியலை யாரேனும் நிராகரிக்க முற்பட்டால், அவர்கள் இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தியைக் கொண்டிருக்க வேண்டும்.

இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தி எங்களிடம் இல்லாத வரை இயற்கையின் சீற்றத்தை இறைவனின் சீற்றமாக கருதுவதே பொருத்துடையதாகும்.

மன்னராட்சிக் காலங்களில் வேந்தர்கள் யாகம் செய்து மக்கள் இன்புற்று வாழ இறைவனிடம் ஆசி வேண்டுவர்.

மன்னர்கள் நடத்தும் இறைவழிபாடு–இறை தொண்டு–வேள்வி–தானம் அத்தனையும் மக்களின் நன்மைக்காக அமைந்திருந்தன.

வேதம் ஓதும் வேதியர்க்கும், கற்புடைய மங்கையர்க்கும், நீதி தவறா மன்னர்க்கும் மும்மாரி பொழிவதாக வகுத்து, அறம் காக்கப்பட்டது.

ஆனால் இன்றோ ஜனநாயகத்தின் பெயரால் எல்லாம் தொலைந்து போயிற்று.

இறைவழிபாடுகள், யாகங்கள், தானங்கள் அத்தனையும் தேர்தல் வெற்றிக்கான திருவிழாவாகிவிட்டன.

வேதம் ஓதும் வேதியர்கள் கொல்லப்படுகின்றனர். கற்புடைமை பறிக்கப்படுகின்றது. நீதிதவறாத ஆட்சிக்கு நீதியே தடைவிதிக்கிறது.

அப்படியானால் நாட்டில் தவமழைக்கு இடமில்லை அவமழையே பெய்யும்.

ஆம், பிராமணர்களைக் கொன்றால் அந்த நாட்டை பிரமகத்தி தோஷம் பீடித்துக்கொள்ளும் என்று வேதசாஸ்திரங்கள் கூறுகின்றன. பிரமகத்தி தோஷம் பிடித்துக்கொண்டால், வெள்ளம் பெருகும்; நிலம் சரியும்; பூமி அசையும்; காற்று சண்ட மாருதமாகும். இவைதான் இப்போது நாட்டில் நடக்கின்றன.

இலங்கைத் தீவை காப்பாற்ற யாரேனும் நினைத்தால், பாவதோஷம் நீக்க நிவாரணம் செய்ய வேண்டும்.

மக்கள் வதைபடுவதை நிறுத்தவேண்டும். நீதி தழைக்க–அனைத்து மக்களும் இன்புற்றிருக்க வேண்டிய சகலவற்றையும் செய்தாக வேண்டும்.

இவற்றோடு பிரமகத்தி தோஷம் நீக்க மகாயாகம் நடத்துவதும் அவசியம். இல்லையேல் பெயருக்கு நாடு இருக்கும். மக்கள் நிம்மதியாக இருக்க முடியாது.

# இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு மின்சாரம்
## தமிழக சட்டப் பேரவையில் காரசார விவாதம்

(சென்னை)

இராமேஸ்வரத்தில் இருந்து கேபிள்கள் மூலம் இலங்கைக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருவதாக சட்டப் பேரவை இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் வை.சிவபுண்ணியம் குற்றம்சாட்டியுள்ளார்.


சட்டப் பேரவையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தில் அவர் உரையாற்றுங்கயில், இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு கேபிள்கள் மூலம் மின்சாரம் கொண்டு செல்லப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தமிழர்களைக் கொன்றுகுவித்த இலங்கைக்கு மின்சாரம் வழங்கும் கொடுமையை என்னவென்று சொல்வது? மீதமுள்ளவர்களையும் கொல்வதற்கு மின்சாரம் தருகிறீர்களா?

இலங்கையில் தமிழர்கள் முள்வேலி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதும் அரசியல் தீர்வுக்கு ஆரம்பகட்ட முயற்சிகள் கூட மேற் கொள்ளப்படாமல் இருப்பதும் கவலை யளிப்பதாகவும் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆளுநர் உரை யில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் காங்கிரஸ் கட்சிக்கு செக் வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பீற்றர் அல்போன்ஸ் தெரிவிக்கையில், எங்களிடம் நம்பிக்கையின்மை என்ற விதையை விதைக்க சிவபுண்ணியம் முயல்கிறார். அதற்கு நாங்கள் ஆட்படமாட்டோம். இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்கு பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசின் துணையோடு மத்திய அரசு எடுத்து வருகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்த சிவபுண்ணியம், எத்தனையோ நாட்டுத் தலைவர்கள் இருக்கும்போது கொமன் வெல்த் விளையாட்டு போட்டி நிறைவு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை ஏன் அழைத்தீர்கள்? மனித உரிமையை மீறி காங்கிரஸ் செயல்படுகிறது என்று குற்றம் சாட்டினார்.

இதன் போது குறுக்கிட்ட அமைச்சர் பொன் முடி, போர் என்றால் பொது மக்களும் இறப் பார்கள் என்று கூறிய கட்சியோடுதான் இப்போது நீங்கள் (கம்யூனிஸ்ட்) கூட்டணி வைத்துள்ளீர்கள் என்றார். (ஸ்ரீ-2)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பொங்கல் பூஜை

அதிகாலையில் சூரியோதயம் ஆனவுடனேயே பொங்கல் வைத்துவிட வேண்டும். வீட்டு முற்றத்தில் பெரிய அளவிலான குத்து விளக்கேற்றி, அதன் முன் ஒரு தலைவாழைஇலையைப் போட வேண்டும். அதன் இடது ஓரத்தில் நாழி நிறைய பச்சை நெல் வைக்க வேண்டும். நாழியின் உச்சியில் நெல் குவியலாக இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். இலையில் பச்சரியைப்பரப்பி, அதன் மேல் கத்தரிக்காய், கருணைக்கிழங்கு, சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, அவரைக்காய், சீனி அவரை, பூசணித்துண்டு, பிடிகிழங்கு, காதரிசி (வெல்லம் பச்சரிசி கலவை) வெற்றிலை, பாக்கு, பழம், கரும்பு, மஞ்சள் கிழங்கு ஆகியவற்றை வைக்க வேண்டும். வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல் பானைகளை அருகில் வைக்க வேண்டும். திருவிளக்கிற்கு பத்தி, கற்பூர ஆரத்தி காட்டிய பிறகு உங்கள் குலதெய்வம் இருக்கும் கோயிலின் திசையை நோக்கியும் காட்ட வேண்டும். பின்னர் சூரிய பகவானுக்கு ஆரத்தி காட்டி வழிபட வேண்டும். 'ஆதித்ய ஹ்ருதயம்' துதி தெரிந்தவர்கள் அந்த ஸ்லோகங்களைச் சொல்லலாம். மற்றவர்கள் சூரியன் குறித்த தமிழ்ப் பாடல்களைப் படிக்கலாம். பின்னர் காகத்திற்கு பொங்கல் வைக்க வேண்டும். காகம் உணவை எடுத்த பிறகு, குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதன் பிறகே பெரியவர்கள் சாப்பிட வேண்டும்.

**மஞ்சள் கிழங்கை என்ன செய்வது?**

ஒரு காலத்தில் மஞ்சள் கிழங்கு கட்டியே பொங்கல் பானையை அடுப்பில் வைப்பார்கள். இப்போது வீட்டுக்குள் பொங்கல் வைப்பதால் மஞ்சள் கிழங்கை வீட்டு வாயிலில் கட்டுகிறார்கள். இது சரியான முறையல்ல.மஞ்சள் கிழங்கை பொங்கல் பானையிலேயே கட்ட வேண்டும். மஞ்சள் தீயில் கருகாத அளவுக்கு சற்று உயர்த்திக் கட்டிவிட வேண்டும்.

# வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம் 02

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றும் இணைந்து செயற்பட ஒரு பயிற்சி தேவை. மனத்தில் தோன்றுவதை வாக்கினால் எடுத்துக் கூற வேண்டும். உடலின் செயற்பாடும் அதை உணர்த்த வேண்டும்.இறைவழிபாடு என்ற எண்ணம் முழுமையாக மனதிலே பரவிவிட்டால் எமது வாழ்வியலில் ஒரு வரையறை தோன்றும். எம்மை நாமே கட்டுப்படுத்தும் ஆற்றல் தோன்றும். இத்தகைய கட்டுப்பாட்டை மணிவாசகர் செய்ததைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

முதலில் அவர் செய்யும் கட்டுப்பாடு இன்பம் நிறைந்த உலகியல் வாழ்வை விடுத்து வழிபாட்டு வாழ்வியலை மேற்கொள்வது. என்குடி கெட நேர்ந்தாலும் புரந்தன், மால்,அயன் என்னும் உயர்ந்த தேவர்களின் இன்பமான வாழ்க்கை எனக்குக் கிடைத்தாலும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

அடுத்து உன் அடி யாரோடல்லாமல் பிறரோடு நான் நட்புக் கொள்ள மாட்டேன். உன்னுடைய திருவருள் நெறியிலே நான் நிற்கப் பெறுவேனேயாயின் நரகத்திற்குச் செல்ல நேர்ந்தாலும் அதனை இகழ்ந்து பேச மாட்டேன். நான் உன் னையல்லால் வேறு தெய்வங்களை மனதால் நினைக்கவும் மாட்டேன்.

பகைவர் புரங்களை அழிப்பவன் என்பதால் இந்திரன் புரந்திரன் எனச் சிறப்புப்பெயர் பெற்றான். மால் என்றால் எல்லோரிடத்தும் அன்பு செய்பவன். பிறப்பில்லாதவன் என்னும் பொருள் தரும் அஜன் என்னும் வடமொழிச் சொல்லே தமிழில் அயன் என வழங்கப்பட்டது. மணிவாசகர் இந்திரன் வாழ்வு சிறப்பாகக் கருதப்பட்டதால் இந்திரனை முதலிற் கூறினார்.

இறைவன் திருவருள் பெற்றவர் நரகம் புகுதல் இல்லையென்பதால் புகினும் என எதிர்மறையாகக் குறிப்பிட்டுள்ளார். இங்கு மணிவாசகர் இறைவனைப் பற்றிய தெளிவோடிருப்பதையும் நன்கு விளக்கியுள்ளார். இறைவன் எங்கும் நிறைந்து இருப்பவன். அத்தகைய குணநலம் அயன்,திருமாலிடம் இல் லையாததால் பிறதெய்வம் எனப் பிரித் துக் காட்டியுள்ளார்.

'உள்ளேன் பிறதெய்வம்' எனத் தன்னுடைய மனக்கட்டுப்பாட்டை அவர் கூறியிருப்பது எமக்கு வழிகாட்டுவது. உள்ளுதல் என்பது நினைத்தல். 'உள்ளேன்' என மனத்தின் செயற்பாட்டைக் கூறுவதன் மூலம் வாக்கினால் வாழ்த்தாதையும் காயத்தால் வழிபடாததையும் எடுத்துக் கூறியுள்ளார்.

பிறதெய்வ வழிபாட்டை நாடவேண்டிய தேவையில்லை. மற்றோர் தெய்வம் பற்றிய சிந்தனையில்லாத உறுதியான வழி பாட்டு நிலையில் நிற்கவேண்டும்.

இதுவே மணிவாசகர் எமக்குக் கூறும் செய்தி. அவருடைய பாடல்களில் பயிலும் பைந்தமிழ்ச் சொற்கள் மனத்தை வருடும் இனிய கனிகள். நினைக்கும் தோறும் இன்பம் தருபவை.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மனத்திடம் கட்டளையிடும் சொற்களாக அவை இருந்தாலும் எம்மனத்தை வருடி எம்மையும் இறைவழி பாட்டிற்கு அழைத்துச் செல்லும் சொற்களாகும். கொள்ளேன், நள்ளேன், எள்ளேன், உள்ளேன் எனப்பாடலின் தொடக்கச் சொற்கள் காதில் படியும் போது எம் மனத்திலும் வந்து குடியேறி விடுகின்றன. உத்தமனாம் இறைவனை நாமும் சென்றடைய வேண்டும் என அழைக்கும் மணிவாசகர் பாடல் இது.

"கொள்ளேன் புரந்திரன்
மாலயன் வாழ்வு குடிகெடினு
நள்ளேன் நினதடியாரொடல்லால்
நரகம்புகினும்
எள்ளேன் திருவருளாலேயிருக்கப்
பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல்
லாதெங்கள் உத்தமனே"

# பிரேஸில் நாட்டில் வெள்ளம்; நிலச்சரிவில் சிக்கி 260 பேர் பலி



பிரேசில் நாட்டில் சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் ரியோடி ஜெனீரோ மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதில் டெரசோ போலில் நகரத்தின் அருகே உள்ள ஆறு உடைந்து நகர பகுதிக்குள் வெள்ளம் புகுந்தது.

இதனால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியதுடன் நிலச்சரிவும் ஏற்பட்டது.

டெரசோ போலில் மற்றும் டெட்ரோ போலில் ஆகிய நகரங்கள் மலைப்பகுதியில் அமைந்துள்ளன. இங்கும் வெள்ளம் புகுந்தது.

இதில் பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி இரு நகரங்கள் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களிலும் 260 பேர் பலியானார்கள். நூற்றுக் கணக்கானோரை காணவில்லை. அவர்களில் பலரை வெள்ளம் அடித்து சென்று விட்டது.

பலர் நிலச்சரிவில் சிக்கி புதைந்து கிடக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் 800 பேர் கொண்ட மீட்பு படையினர் ஈடுபட்டு உள்ளனர்.


அத்துடன் கடற்படையும் வரவழைக்கப்பட்டுள்ளது. அவர்கள் வெள்ளத்தில் சிக்கி தவிப்பவர்களை ஹெலிகொப்டர் மூலம் மீட்டு வருகின்றனர்.

வெள்ளம் பாதித்த பகுதிகளை ஜனாதிபதி தில்மா ரூசப் பார்வையிட்டு மீட்பு பணிகளை முடுக்கி விட்டார்.

வெள்ள நிலைமை மோசமாக இருப்பதால் ரியோடி ஜெனீரோ பகுதியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# 6100 ஆண்டுகளுக்கு முந்தைய வைன் தொழிற்சாலை கண்டுபிடிப்பு



அர்மேனியா நாட்டின் மலைக் குகை யில் 6ஆயிரத்து100 ஆண்டுகளுக்கு முந் தைய வைன் தயாரிக்கும் தொழிற்சாலை கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கலிபோர்னியா பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த கிரிகோரி அர்ஷியன் என்பவர் தொல்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். இவர் அர்மேனியா நாட் டின் மலைகளில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிரு ந்தார்.


இத்தொழிற்சாலையில் திராட்சை கூழாக்க பயன்படுத்திய பள்ளம், புளிக்க வைக்கும் சாடிகள், குடிக்க பயன்படுத்தும் கப் மற்றும் கிண்ணங்கள் இருந்தன. இங்கு 3 அடி நீள குழிவான பள்ளம் ஒரு பெரிய கொப்பரையு டன் இணைக்கப்பட்டிருந்தது.

பள்ளத்தில் திராட்சை கொட்டி காலால் மிதித்து இதிலிருந்து வெளியேறும் சாறு கொப்பரையில் போய் சேர்ந்துள்ளது. பின் னர் இதை சாடிகளில் ஊற்றி புளிக்க செய் துள்ளனர்.பண்டைய காலத்தில் வைன் தயா ரிப்பு தொழிற்சாலை இருந்ததற்கும் மக்கள் வைன் அருந்தியதற்கும் இது சரியான உதார ணம் என்று கிரிகோரி அர்ஷியன் கூறினார். (ஸ்ரீ-2)




# அமெரிக்காவில் ஒபாமாவின் செல்வாக்கு அதிகரிப்பு

## கருத்து கணிப்பில் தகவல்



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பதவி ஏற்ற நேரத்தில் அமெரிக்காவின் பொருளாதாரம் சரிந்து இரு ந்தது. வேலைவாய்ப்பும் கிடைக்கவில்லை. இதை நிவர்த்தி செய்துவிடுவார் என்று அமெரிக்கர்கள் நம்பினார்கள்.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்த படி ஒபாமாவால் செய்ய முடியவில்லை. எனவே அவருடைய செல்வாக்கு சரிந்தது. ஆனால் இப் போது பொருளாதார சரிவு ஓரளவு சீராகி வருகிறது.

இதனால் ஒபாமாவுக்கு செல் வாக்கு அதிகரித்து வருகிறது. கட ந்த டிசம்பர் மாதம் நடத்தப்பட் ஆய் வில் அவருக்கு 45 சத வீதம் பேரே ஆதரவு தெரிவித்தனர். ஆனால் இப்போது நடத்தப்ப ட்ட ஆய்வில் 50 சதவீதம் பேர் ஆத ரவு தெரிவித்துள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒபாமா பதவியேற்று 100 நாட்கள் ஆகி இருந்த போது அவர் நிருபர்களுக்கு வழங்கிய பேட்டியில் அமெரிக்க பொருளாதாரத்தை இப்போது சரியான பாதையில் பயணம் செய்ய வைத்து இருக்கிறேன். இதன் மூலம் அமெரிக்காவில் முன்னேற் றம் ஏற்படும் என்று கூறியிருந்தார்.

அது உண்மை தான் என்று சொல்லும் அளவுக்கு இப்போது பொருளாதார சரிவு சீராகியுள்ளது. அமெரிக்கப் பொருளாதாரம் சரி யான திசையில் செல்வதாக 36 சத வீதம் பேர் அப்போது கருத்து தெரிவித்திருந்தனர். கடந்த டிசம்பர் மாதம் 79 சதவீதம் பேர் பொருளாதாரம் சரியாக செல்வதாக கூறியுள்ளனர். (ஸ்ரீ-2)

# அமெரிக்காவில் பனிப்புயல் 11 அங்குலத்துக்கு கொட்டியது

## 4 மாநிலங்களில் நெருக்கடி நிலை

(அட்லாண்டா)

அமெரிக்காவில் பனிப்புயல் காரணமாக 11 அங்குலத்துக்கு பனி கொட்டியது. இதனால் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட் டது.

வீதிகளில் உறைந்து கிடக்கும் பனிக்கட்டி மீது சென்ற வாகனங்கள் சறுக்கியதால் விபத் துக்கள் ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஏற்பட்டது. 4 மாநிலங்களில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

அமெரிக்காவில் கடந்த திங்கட்கிழமை முதல் பனிப்புயல் வீசிவருகிறது. இதில் டென் னசி மாநிலத்தில் 11 அங்குல உயரத்துக்கு பனி கொட்டியது.

தெற்கு கரோலினா மாநிலத்தில் 9 அங் குல் உயரத்துக்கும் ஜோர்ஜியாவில் 4 அங்கு லத்துக்கும் பனி பெய்தது. பனிப்புயல் காரணமாக ஓடுபாதைகளில் பனிக்கட்டி உறைந்து போய் இருந்ததால் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அட்லாண்டா நகரில் உள்ள ஹார்ட்ஸ் பீல்டு ஜாக்சன் விமான நிலையம் உலகி லேயே மிகவும் பரபரப்பான விமானநிலை யம் ஆகும். இந்த விமான நிலையத்துக்கு வரும் விமானங்களும் மற்றும் புறப்படும் விமானங்களும் இரத்து செய்யப்பட்டன.

இதனால் விமானத்தில் பயணம் செய்ய வேண்டிய பயணிகள் விமான நிலையத்தி லேயே படுத்து தூங்கினார்கள்.


வீதிகளில் பனிக்கட்டி உறைந்து கிடந்த தால் அதன் மீது சென்ற வாகனங்கள் சறுக்கி விழுந்ததில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. தெற்கு கரோலினா மாநிலத்தில் கொலம்பியா நகரில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான கார்கள் விபத்தில் சிக்கின.

வாகனங்கள் சறுக்கியதால் ஒன்றன் மீது ஒன்று மோதிக் கொண்டன. வீதி விபத் துக்களில் பலர் பலியானார்கள்.

டென்னசி நகரில் தபால் இலாகா அதிகாரி ஒருவர் கூறுகையில்,

பனி காரணமாக தபால் பட்டுவாடாவில் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதாகவும் போக்குவர த்து பாதிக்கப்படாத இடங்களில் மட்டும் விநியோகம் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

அலாபாமா , ஜோர்ஜியா, லூசியானா, டென்னசி ஆகிய மாநிலங்களில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவில் அந்த அந்த மாநில ஆளு நர்கள் கையெழுத்திட்டுள்ளனர். (ஸ்ரீ-2)



சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க இராணுவ அமைச்சர் றொபேர்ட் கேட்ஸ் (வலது) அந்நாட்டில் உள்ள உலக அதிசய சின்னமான சீனப் பெருஞ்சுவரை பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

# வளர்ச்சிக்காக சீனா தந்த விலை; 258 நகரங்களில் அமில மழை

(பீஜிங்)

சீனா தனது அபரிமிதமான பொருளா தார முன்னேற்றத்திற்கு மிக அதிகமான விலை கொடுத்திருக்கிறது. ஆம் அதன் 258 நகரங்களில் அமில மழை பெய்திருப்பதாக ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலக்கரி எரிவதால் கந்தக வீரொட்சைட் மற்றும் நைதரசன் ஒட்சைட்டுக்கள் வெளியேறும்.


இவை காற்றில் கலக்கும் போது மழை பொழிந்தால் நீரோடு சேர்ந்து சல்பூரிக்கமிலம் மற்றும் நைத் திரிக் அமிலங்களாக மாறும். உலக ளவில் நிலக்கரியை அதிகமாகப் பயன்படுத்தும் நாடுகளில் சீனா முக்கிய இடம் வகிக்கிறது.

சீனாவில் ஆண்டுதோறும் 300 கோடி தொன் நிலக்கரி பல்வேறு தொழில்களில் பயன் படுத்தப்படுகிறது. இதனால் உலகில் அதிகளவில் அமில மழை பெய்யும் பகுதிகளில் சீனா மூன்றா வது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 2005 இன் அறிக்கை ஒன்று நாட் டின் 28 சதவீத பகுதிகள் குறிப்பாக யாங்க்ட்ஸி ஆற் றுப் பகுதி மிக மோச மாக அமில மழையால் பாதிக் கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது.

நாட்டின் மேற்கு கடற் கரையோரப் பகுதிகளான செங்டு, சோங்கிங், பான்-பெய்பு வளைகுடா பொருளாதார மண்டலப் பகுதிகள் ஆகியவற்றில் அமில மழை யின் அளவு அதிகரித்து வருகிறது. இந்த பகுதிகள் தான் நாட்டின் அடுத்த தலை முறை பொருளாதார மையங்க ளாகக் கருதப்படுகின்றன.

இந்நிலையில் சமீபத்தில் ப்யூஜியான் மாகாணத்தில் ஷியாமென் நகரில் நடந்த ஓர் ஆய்வு அதிர்ச் சியான தகவல்களை அளித்துள்ளது. கடந்த 2010 இன் முன்பகுதி மழைக் காலங்களில் ஒவ்வொரு துளியிலும் அமிலம் கலந்திருந்ததாக அந்த ஆய்வு கூறுகிறது.

கட்டடங்களில் படிந்த இந்த அமிலத் துளிகள், துருப்பிடித்தது போல காணப்படுகின்றன. அங்குள்ள



பாறைப் பிளவில் புடை ப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய புத்தர் சிலையின் மீதும் இந்த அமில மழைத் துளிகள் விழுந் ததால் அதன் மூக்கு கறுப்பாகி விட்டது.

சிலையின் தலைமுடியில் உள்ள சுருண்ட பகுதிகள் கீழே விழுந்து விட்டன. இது வரை செந்நிறமாக இருந்த அந்த சிலை தற்போது சாம்பல் நிற மாக மாறி வரு கிறது.

கட ந்த 2009 இல் சீன சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சகம் நடத்திய ஆய்வில் இந்த அமில மழையால் சீனாவின் 258 நகரங்களும் பகுதிகளும் பாதிக்கப்பட்டது தெரிந்தது. (ஸ்ரீ-2)

# துடுப்பாட்டம் மோசம்; இந்தியா பாவம்
# தென்னாபிரிக்க அணி அபார வெற்றி

(டர்பன்)

டி.வில்லியர்ஸ், டுமினி, ரிசொற்சோபேயின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி 135 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி மூன்று டெஸ்ட், ஒரேஒரு இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடர் சமனிலையான நிலையில் ஒரேஒரு இருபது-20 தொடரில் இந்திய அணி வெற்றிபெற்றது.

இந் நிலையில் முதலாவது சர்வதேச ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் டர்பனில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பத்துடுப் பாட்டவீரர் சிமித் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

அடுத்துகளமிறங்கிய இங்ராம் 5 ஓட்டங்களுடன் வெளியேற தென்னாபிரிக்க அணி 72 ஓட்டங்களை எடுத்து 2ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து டிவில்லியர்ஸ் களமிறங்க மறுமுனையில் ஹசிம் அம்லா தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார்.

எனினும் ஹசிம் அம்லா 36 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 50 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 82 ஓட்டங்களை எடுத்து மூன்றாவது விக்கெட்டை பறிகொடுத்தது.

இந் நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த டி வில்லியர்ஸ்-டுமினி ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது.

இதில் டி வில்லியர்ஸ் 48 பந்துகளிலும் டுமினி 61 பந்துகளிலும் அரைச்சதம் விளாச தென்னாபிரிக்க அணி 33.1 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 21.5 ஓவர்களில் 131 ஓட்டங்களை இணைப் பாட்டமாக எடுத்தபோது டி வில்லியர்ஸ் 69 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 76 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய மில்லர் 09 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரங்கு திரும்பினார். அடுத்து போத்தா களமிறங்க மறுமுனையில் டுமினி 89 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 73 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்வரிசையில் போத்தா, பார்னல் தமது பங்கிற்கு ஓட்டங்களை பெற தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 289 ஓட்டங்களை எடுத்தது.

இதில் போத்தா 23 ஓட்டங்களையும் பார்னல் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான், முனாப்பட்டேல், ரோகித்சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ரெய்னா, ஹர்பஜன் சிங், நெகரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 290 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் முரளிவிஜய் ஒரு ஓட்டத்துடனும் சச்சின் டெண்டுல்கர் 07 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

அடுத்து இணைந்த ஹோலி, சர்மா ஜோடி நிதானமாக துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தது. எனினும் ரோகித் சர்மா 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த யுவராஜ்சிங் 02 ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணி 10.5 ஓவர்களில் 43 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

அடுத்து 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹோலி, தோனி ஜோடி பொறுப்புடன் ஆட இந்திய அணி சரிவிலிருந்து மீண்டது. இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 12 ஓவர்களில் 52 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் தோனி 25 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரெய்னா களமிறங்க மறுமுனையில் ஹோலி 66 பந்துகளில் அரைச்சதத்தை பூர்த்திசெய்தார். எனினும் விராட் ஹோலி 70 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 29.3 ஓவர்களில் 128 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களை இழந்தது.

இறுதியில் ரெய்னா ஓரளவு பிரகாசித்தும் இந்திய அணி 35.4 ஓவர்களில் 154 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் சுரேஷ் ரெய்னா 36 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 32 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ரிசொற்சோபே 4 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், மோர்கல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பார்னல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த ரிசொற்சோபே ஆட்டநாயகனாக தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நாளை நடைபெறுகிறது.



அகில இலங்கை சமாதான நீதவானும் யாழ்.கல்வி வலயத்தின் பிரதான முகாமைத்துவ உதவியாளரும் சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் சர்வதேச பணிப்பாளருமாகிய தாதப்பிள்ளை தர்மரட்ணம் மற்றும் சமாதான நீதவானும் கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரும் சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய ஜெகதீசலிங்கம் சத்தியேந்திரனும்,பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த, அதிவணக்கத்திற்குரிய கர்தினால் மல்கம் றஞ்சித் ஆகியோரிடமிருந்து சமூக சேவைக்கான விஸ்வகீர்த்தி விருதினையும் தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். அவர்கள் இருவரையும் படங்களில் காணலாம். இவ்விருதினை சமாதான நீதவான் எஸ்.சுந்தரலிங்கமும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

## அடாத மழை; விடாத...

ளம் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 5இலட்சம் ஏக்கர் நெல்வயல்கள் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையின் வானிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. லா நினா என்னும் காலநிலை அனர்த்தம் உலகம் முழுவதையும் பாதித் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடல் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றம் தரைப் பகுதியை பெரிதும் பாதிக்கும் நிலைமையே லா நினா அனர்த்தம் என அழைக்கப்படுகிறது.

இதனால் இலங்கையின் வானிலையில் பாரிய மாற்றங்களை எதிர் பார்க்க முடியும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. மழை வீழ்ச்சி 100 வீதத் தினால் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.1912ஆம் ஆண்டின் பின்னர் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் கடுமையான மழை வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு தினங்களில் குறித்த பிரதேசங்களில் 295மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. நாட்டின் நிலவி வரும் மோசமான காலநிலை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும்.

இதேவேளை இலங்கையின் பல பாகங்களிலும் அசாதாரணமான குளிர்காலநிலை நிலவி வருகிறது. நேற்றைய தினம் மாலை வேளையில் நுவரெலியாப் பிரதேசத்தில் 8 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவு செய்யப்பட்டுள்ளது. (ந-5)

## இந்திய ஒத்துழைப்புக்கு...

டுத்தவும் நாட்டைப் பிளவுபடுத்தவும் சில ஊடகங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் இலக்குகளை எவரேனும் நிறைவேற்ற முயற்சித்தால் அது முறியடிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது.

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்றே யாழ்ப்பாணத்திலும்சிலகடத்தல்மற்றும்கொலைச் சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன என்று கூறினார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளின் போது இந்தியாவின் ஒத்துழைப்பை வரவேற் போம்.

எனினும் இலங்கைக்கே உரிய தீர்வுத்திட்டமே முன்வைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ந-5)

## வெள்ளப்பாதிப்பு நிவாரணம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், மாணவர்களுக்கும் உதவ வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் முன்வந்துள்ளது.

இவ் உதவிப் பணியில் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள்,பெற்றோர்கள், நலன் விரும்பிகளைப் பங்கேற்குமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கேட்டுள்ளார். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கும் விசேட கல்வி அலகில் நிவாரண உதவியாக பணத்தையோ அல்லது பொருட்களை யோ ஒப்படைக்க முடியும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்க இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிவாரணப் பணிக்கு உதவ முன்வருவோர் தமது உதவிகளை இல.73,கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள யாழ்.காரியாலயத்தில் ஒப்படைக்க முடியும் அதே நேரம் 021 222 2561, 021 321 5555 என்ற தொலைபேசி இலக்ககங்களுடனும் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)



ஹபரணை பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்குண்டு 3 வயதான யானையொன்று சுமார் 15 அடி உயரமான மரமொன்றில் சிக்குண்டு உயிரிழந்துள்ளது. குறித்தபகுதியில் சுமார் 18 அடி உயரத்திற்கு வெள்ளம் நிரம்பியிருந்த நிலையிலேயே குறித்த யானை மரத்தில் சிக்கிய நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது மரத்தில் சிக்குண்ட யானையின் உடலத்தை படத்தில் காணலாம்.

## வடக்கு மாணவர்கள்...

சித்திபெற்று கலைத்துறை, மருத்துவத்துறை, பொறியியற்துறை, முகாமைத்துவத்துறை ஆகிய பிரிவுகளில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற 100 மாணவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 100 மடிக் கணனிகளை வழங்கி வைக்கின்றார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரினால் 100 மடிக் கணனிகளும் அன்பளிப்புச் செய்யப்படுகின்றது.

குறித்த மடிக் கணனிகள் பெறுவதற்கு பின்வரும் அடிப்படையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட நிலையைப் பெற்ற மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

கலைத்துறை, வணிகத்துறையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவர்களும், மருத்துவத்துறையில் யாழ். மாவட்டத்தில் முதல் 25 இடங்களையும் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் 4 இடங்களையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் 3 மாணவர்களும் வவுனியா மாவட்டத்தில் முதல் 5 மாணவர்களும் மன்னார் மாவட்டத்தில் முதல் 3 மாணவர்களும்

பொறியியல் துறையில் யாழ். மாவட்டத்தில் முதல் 25 இடங்களையும் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் 3 இடங்களையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் 3 இடங்களையும் வவுனியா மாவட்டத்தில் முதல் 5 இடங்களையும் மன்னார் மாவட்டத்தில் முதல் 4 இடங்களையும் பெற்ற மாணவர்கள் மடிக் கணனி பெறுவதற்கு தகுதியுடையவர்கள்.

எனவே மேற்படி ஒழுங்கில் மடிக் கணனி பெறுவதற்கு தகுதிபெற்ற மாணவர்கள் இன்று தமது வலயக் கல்வி அலுவலகத்தின் ஊடாக பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்திற்கு தொலைநகல் மூலம் அறிவிக்க வேண்டும்.

இந்நடைமுறை தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் பொருந்தமுடையது.

அத்துடன் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு 100 மாணவர்களும் சீருடை அணிந்து பெற்றோர்களுடன் யாழ்.கல்வி வலயம் அமைந்துள்ள வளாகத்திற்கு சமுகமளிக்கவேண்டும்.

அங்கிருந்து விசேட பாஸ் வழங்கப்பட்டு நிகழ்ச்சி நடைபெறும் துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு அழைத்துச் செல்லப்படுவர்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-5)

## தீவகத்தில்...

பாதைத் தொடர்பில்லாததால், நெடுந்தீவு தொடர்ந்தும் கடற் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. (ந-5)

## உரும்பிராயில்...

கிணறு நேற்று துப்புரவாக்கப்பட்ட போது கிணற்றின் அடியில் காணப்பட்ட அவரது கைத்தொலைபேசி மற்றும் கடைசியாக அணிந் திருந்த சாரம் என்பவற்றைக்கொண்டே சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் பிறப்பித்த உத்தரவின் பிரகாரம் நேற்றுக் காலை கோப்பாயப் பொலிஸார் அந்தக் கிணற்றை துப்புரவாக்கும்பணியில் ஈடுபட்டனர். இந்நிலையிலேயே கிணற்றின் அடியிலிருந்து கைத்தொலைபேசி மற்றும் அவரது சாரம் என்பன கண்டெடுக்கப்பட்டு அதன்மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வன்னி யுத்தத்தில் சிக்குண்டு முகாமிலிருந்த அவர் அண்மையிலேயே முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். இவரின் மனைவி எறிகணை வீச்சில் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-5)

## தமிழக மீனவர்...

அறிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல்வெளியிட்டுள்ளன.

தேவையில்லாமல் இலங்கை கடற்படையினர் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்ற இணக்கப்பாடு 2008-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லைஎனவும் மீள இந்தியா செல்வதற்கு தாம் உதவிகளை வழங்கியதாகவும் இலங்கைகடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படையினர் நடத்தியதாக் குதலில் ஒரு மீனவர் கொல்லப்பட்டதுடன் மற்றொரு மீனவர் படுகாயமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. (ந-5)


### இடியப்பம் பிளிவதற்கு ஆள் தேவை

இடியப்பம் பிளிவதற்கு ஆள் உடனடியாகத் தேவைப்படுகின்றது. முன் அனுபவம் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P.:0772820810 (3522)

### கடை வாடகைக்கு

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் மக்கள் வங்கி முன்பாக களஞ்சிய வசதியுடன் கூடிய கூரை சீமெந்திலான (பிளேற்) கடை வாடகைக்குண்டு.

தொடர்பு:-0783014080 (க-2152)

### வாடிக்கையாளப் பெருமக்களே!..

மாபெரும் விலைக் கழிவுடனான தள்ளுபடி விற்பனை

❁ பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்களுக்கு 10% தொடக்கம் 20% வரையான கழிவு வழங்கப்படும்.

❁ அப்பியாசக் கொப்பிகள் விசேட கழிவு விலையில் வழங்கப்படும். ஏனைய ஸ்ரேசனரிப் பொருட்கள், விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் ,வைற் போட்,கிறீன் போட் வகைகள், OVER HEAD PROJECTOR ,O.H.P.SCREEN, LAMINATOR, BINDING MECHINE உட்பட அனைத்து வகை கல்விசார் உபகரணங்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட இன்றே விரையுங்கள்.

அப்பியாசக் கொப்பிகள் நீங்கலாக ரூ. 2000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அழகிய கோப்புகள் வைக்கக் கூடிய றெச்சின் பாக் (Regsin Bag) ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

அனேக வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையும் (16/01/2011) எமது வியாபார நடவடிக்கைகள் நடைபெறும். (C-2147)

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212 ,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


## வெள்ளைக்கொடி வழக்கு...

செவ்வி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இவ் விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நான்காவது சாட்சியமாக அழைக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய விசாரணைகளின் போது வழக்கில் அடுத்த சாட்சியமாக கோத்தபாய ராஜபக்ஷ அழைக்கப்படவேண்டும் என அரச தரப்புச் சட்டத்தரணி டிலான் ரத்நாயக்க நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டதுடன்,

இது குறித்து கோத்தபாய ராஜபக்ஷவுக்கு முன் அறிவித்தல் கடிதம் ஒன்றை அனுப்புமாறும் கோரிக்கை விடுத்தார். இக் கோரிக்கையைப் பரிசீலித்த மேல் நீதிமன்ற மூன்று நீதியரசர்கள் அடங்கிய குழு படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை எதிர்வரும் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் சமுகமளித்து சாட்சியமளிக்குமாறு முன் அறிவித்தல் கடிதம் அனுப்பியுள்ளதுடன் இவ் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந-5)


### பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பாதுகாப்பு சேவை நிறுவனத்துக்கு பாதுகாப்பு சேவை பணியில் ஈடுபடக்கூடியவர்கள் தேவை. தகுதியானவர்கள் சுயவிபரம் மற்றும் முன் அனுபவம் என்பவற்றை உள்ளடக்கிய விண்ணப்பத்தை

விளம்பர இல.3388,
இல.03, 2ம் ஒழுங்கை ,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


## எதிர்க்கட்சி...

டிக்கைகளில் எதிர்க்கட்சிகளையும் இணைந்து கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி போன்ற எதிர்க்கட்சிகள் கொழும்பிலிருந்து கொண்டு வெள்ள அனர்த்தம் தொடர்பாக பொய்யான தகவல்களை தெரிவிப்பதாக அவர் குறிப்பட்டார்.

எமது அரசாங்கம் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களோடு மக்களாக நின்று செயற்படுகின்றது. எதிர்க்கட்சிகள் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிடாமல் கொழும்பிலிருந்துகொண்டு பொய்யான அறிக்கைகளை விடுக்கின்றனர் என அவர் கூறினார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், நான் மட்டக்களப்புக்குச் சென்றபோது சொகுசு ஹோட்டலில் தங்கியதாகக் கூறியுள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அனைத்துக் ஹோட்டல்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் நான் எவ்வாறு சொகுசு ஹோட்டலில் தங்க முடியும் என அமைச்சர் மகிந்த அமரவீர கேள்வி எழுப்பினார். (ந-5)


ITP

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Technology and Research
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office: 021 222 3641 Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❁ *Online Class*
*Diploma in PC Application & Office Management*
*(MS Office syllabus included)*

❁ *Workshop Classes*
*Internet & E-Mail*
*Adobe Photoshop*

❁ *Diploma Classes*
*Diploma in MS Office*
*Diploma in DTP*

❁ *Certificate Courses*
*Ms Word, Ms Excel*
*Ms Access, Visual Basic*
*CorelDRAW, PageMaker*

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் :250/=

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 07/02/2011
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 05/02/2011

- Centre for Information Technology -
- *Executive Officer* -


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.